முரசு: 3
ஒலி: 9

# தமிழ் முரசு

1985
ஆடி

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

Tamil Murasu



உலக மக்களது உதிரத்தை உறையவைத்த கறுப்பு ஜீலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்




## கறுப்பு ஜூலைப் பிரகடனம்

1919ம் ஆண்டு இந்திய வரலாற்றில் ஒரு கரிய அத்தியாயம். ஜாலியான் வாலா பாக்கில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் நடத்திய மிருகத்தனமான வெறியாட்டத்திற்கு 379 இந்தியப் பிரஜைகள் பலியானார்கள். இந்தப் படுகொலைகளிற்குக் காரணமான பிரித்தானியாவின் தந்திரப் பொறிகளிலொன்றான அரசியலமைப்பின் சுவடுகளை இன்னமும் பாதுகாக்கும் சிறிலங்காவிற்கு ஒரு கறுப்பு வரலாறு 1983 ஜூலையில் - தமிழ்ப்பேசும் மக்களின் உதிரத்தால் எழுதப்பட்டது. அன்று சிந்தப்பட்ட குருதி இன்னமும் காயவில்லை. அதனை நினைவு கூர வேண்டிய வரலாற்றுக் கடமை எமக்கு முன்னுள்ளது.

இந்த நினைப்பின் தடத்தில் நின்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இம்மாதத்தைக் "கறுப்பு ஜூலை" எனப் பிரகடனப் படுத்தியிருக்கிறது.

83 ஜூலை சிறிலங்கா அரசின் திட்டமிடப்பட்ட இன அழிப்பிற்கான தெரிவாயமைந்தது. காட்டுமிராண்டித் தனமான சித்திரவதைகள் மூலம் தமிழ் பேசும் மக்களின் உயிருக்கு வேட்டு வைக்கப்பட்டது. இதைக் கண்டு கண்ணீர் வடித்தது உலகம். சர்வதேச அபிப்பிராயங்களும் எமக்குச் சாதகமாகின. ஈழம் அத்தியாவசியம் என்ற விழிப்புணர்வு தமிழ் பேசும் மக்களிடையே தலை தூக்கியது.

ஈழப்போராட்டத்திற்கு உந்து சக்தியைக் கொடுத்த கறுப்பு ஜூலையை நினைவு படுத்தும் பிரகடனம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. இது தொடர்பாக இங்கு வாழும் ஈழ மக்களின் பங்களிப்புகள் எவை என்பது தொடர்பான விளக்கங்கள் எம்மால் ஏற்கனவே உங்கள் முன் வைக்கப்பட்டு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 நாட்களை உள்ளடக்கிய கறுப்பு ஜூலையில் நாம் செய்வதற்கான பணிகள் குவிந்து கிடக்கின்றன இந்த ஒரு மாதத்தையும் - நாம் விசேட மாதமாக நினைத்து வழமையிலும் பார்க்க எமது இயங்கு சக்தியினை கூடுதலாக ஈழப் பணிக்காக அர்ப்பணிக்க வேண்டும் குறிப்பாக! போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் இயக்கங்களுக்கு உங்களால் இயன்ற வகையில் உதவுங்கள். அத்தோடு ஆடம்பர கேளிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து எம்முடைய கடந்த காலங்கள் எப்படி அமைந்தன என்பதை நாம் கூர்மையுடன் திரும்பிப் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். சோதனைக்கு மேல் சோதனையும், ஏமாற்றத்திற்கு மேல் ஏமாற்றமும் தான் நாம் அடுக்கடுக்காக எதிர்கொண்டவை. இத்தகைய ஒரு நிலைக்கு காரணம் சரியான அரசியல் விழிப்புணர்வு இன்மையும் எங்கள் தேவை எது என்பதிலிருந்து இழப்பமுமேயாகும். ஆனால் இந்நிலை இன்று மாறி வருகின்றது.

இத்தனைக்கும் மேலாக கறுப்பு ஜூலையில் நாம் உங்களிடம் தோழமையுடன் இரண்டு வேண்டுகோள்களை விடுக்கின்றோம் (1) மக்கள் அனைவரும் ஈழத்தேசிய விடுதலை முன்னணியை மேலும் வளர்த்தெடுக்க வேண்டும் (2) இனிமேலும் பார்வையாளராக இருக்காது அத்தனை ஈழ மக்களும் தமது வரலாற்றுப் பங்களிப்பினைச் செய்ய காலம் தாழ்த்தாது முன் வர வேண்டும்.

கறுப்பு ஜூலைப் பிரகடனம் ஈழ விடுதலைக்கு பாரிய ஆதரவை அள்ளித்தரும் என்பது எமது நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவெறிக்குப் பலியாகும் ஈழமக்கள்

சிறீ லங்கா அரசபயங்கரவாதப் பசிக்கு ஈழமக்கள் தொடர்ந்தும் பலியாகிக்கொண்டு வருகின்றனர். 16.5.85 அக்கரைப்பற்றில் 18 தமிழ் இளைஞர்கள் பொலிஸ் கமாண்டோக்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதேதினத்தில் அங்குள்ள பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர். 17.5.85இல் தம்பிலுவில் 40 தமி இளைஞர்களை ஆயுதப்படையினர் உயிருடன் புதைத்துக் கொன்றனர். இதே வேளையில் சின்னமுத்துவரனில் 41 தமிழ் இளைஞர்கள் பொலிஸ் கமான்டோக்களால் சுட்டுக் கொல்லப்பட்டு அங்குள்ள மயானத்தில் எரிக்கப்பட்டனர். 18.5.85. 4தமிழர்கள் இலுப்பையடிச்சேனையில் கைதுசெய்யப்பட்டு கொடுவாமுனையில் சுட்டுக் கொல்லப்பட்டனர். மே மாதக் கடைசி வாரத்தில் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பில் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். 31.5.85இல் மூதூர் ஸ்ரீநகர் கிராமத்தில் 40 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சிலர் இதனால் காயமடைந்தனர்.. வெல்லாவெளிச் சூட்டுச் சம்பவத்துக்குப் பின் அகதிகளாக்கப்பட்டவர்களே இங்கு குடியேறியிருந்தனர். இதேதினம் அட்டாளைச்சேனையில் தேடுதல் வேட்டையில் இறங்கிய இராணுவம் இளைஞர் ஒருவரைச் சுட்டுக் கொன்றது. 1.6.85இல் பாதுகாப்புப்படை மட்டக்களப்பில் இரண்டு இளைஞர்களைச் சுட்டுக் கொன்றது. அதேதினத்தில் பாலமீன்மடுவிற்கு அருகில் 36 வயதுடைய பெண் ஒருவர் துவக்குச் சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார். 3.6.85இல் 13 சடலங்கள் திருமலை ஆஸ்பத்திரியில் அடையாளம் காண வைக்கப்பட்டன. 4.6.85 அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற பஸ்கள் மதவுச்சிக்குளத்தில் தாக்குதல்களை எதிர்கொண்டதால் திரும்பி வந்தன. நல்லூரில் 62 வயது மூதாட்டி ஒருவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்ட நிலையில் காணப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்குளத்தில் 3.6.83 அன்று சிங்களக் காடையர்களால் பஸ் ஒ ன்று தாக்கப்பட்டதில் 13 தமிழர்கள் கொல்லப்பட்டனர். எழுவை தீவு கடலோரத்தில் உருக்குலைந்த நிலையில் சடலமொ ன்று கண்டுபிடிக்கப்பட்டது. முல்லைத்தீவிற்கருகில் சிங்களக் கா டையர் லொரியொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய் ததில் 2 தமிழர் இறந்தனர். ஒருவர் காயமடைந்தார். 6.6.85இல் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற ரயில் ஒன்று மகோவில் வழிமறிக்கப்பட்டது. அதற்குள் இருந்த தமிழர்கள் தாக்கப்பட்டதோடு அவர்களது உடமைகளும் கொ ள்ளையடிக்கப்பட்டன. இதேவேளையில் கொழும்பிலிருந்து 85 பயணிகளுடன் யாழ் வந்த 2 பஸ்கள் குருநாகலுக்கருகில் தாக் குதல்களுக்கு உள்ளாகின. பயணிகளுடைய உடமைகள் சூறையாட ப்பட்டன. முல்லைத்தீவில் இராணுவம் மேற்கொண்ட துப்பாக் கிச் சூட்டில் ஒருவர் இறந்தார் இருவர் காயமடைந்தனர். 8.6.85 அன்று கம்பகாவில் சுடப்பட்ட தமிழ் வர்த்தகர் ஒரு வர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கிளிநொ ச்சி ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் மலேரியா தடுப்புப் பிரிவு அதிகாரி திரிலோகசுந்தரம் இராணுவத்தால் சுட்டுக் கொல் லப்பட்டார். மட்டக்களப்புக் கல்லடிக்கருகே 6 பிள்ளைகளின் தாயொருத்தி சுடப்பட்டு இறந்த நிலையில் மின்கம்பமொன்றில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தார். 44 வயதுடைய பெண் கடத்திச் செல்லப்பட்டதாகவும், இவரது சடலத்துக்கருகில் து ண்டுப்பிரசுரங்கள் கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மூதூர் பகுதியிலேற்பட்ட இராணுவ அராஜகத்தினால் 80க்கு மேற்பட் டோர் கொல்லப்பட்டனர். திசமகரும பொலிஸ் விடுதியில் உறங்கிக் கொண்டிருந்த தமிழ்ப்பொலிசான திருநாவுக்கரசு கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார் இது தொடர்பாக அங்கிருந்த ஏனைய பொலிசார் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு திட்டமிட்ட அரச பயங்கரவாதம்

1985ஜூலை 25ஆம் திகதி கொழும்பு நகரம் பற்றி எரிந்துகொண்டிருந்தது. தமிழ் பேசும் மக்களின் உடல்கள் ஈவிரக்கமின்றி வீதிகளில் சிங்களக் காடையர்களினால் வெட்டிவீழ்த்தப்பட்டன. புறக்கோட்டைச் சந்தைக்கு வந்த ஆண்களும் பெண்களும் துடித்துப் பதைத்துத் தமது உயிரைக்காக்க ஓடிக்கொண்டிருந்தனர். அசையக்கூடிய தமிழருடமைகள் திருடப்பட்டன. அசையாவுடமைகள் அழிக்கப்பட்டன. இவைகளைப் பார்த்துக் கலங்கிய தமிழிளைஞனொருவன் தான் தொழில் புரியும் காரியாலயத்துக்குள் நுளைகிறான். படபடப்போடு தொலைபேசியையெடுத்து பொலிஸ் அவசர சேவைக்கான இலக்கத்தைச் சுழட்டுகிறான். மணி அடிக்கிறது... பதிலில்லை. மீண்டும் சுழட்டுகிறான்.... பதிலில்லை. பொலிசாரையழைக்கும் முயற்சியில் நம்பிக்கையிழந்து தீயணைப்புப்படையை அழைக்கும் அவசர இலக்கத்தைச் சுழட்டுகிறான் 'அங்கும்' மணியடிக்கிறது... பதிலில்லை. எப்படியாவது நிராயுதபாணிகளாகச் செத்துக்கொண்டிருக்கும் அப்பாவித் தமிழ் மக்களைக் காக்கவேண்டுமென்ற தவிப்பு அவனிடம். ஆனால், என்ன செய்ய முடியும்?? மணி அடிக்கிறது...பதிலில்லை. இறுதியில் திட்டமிட்ட ஒரு நாடகத்தின் ஒரு முக்கிய அங்கமே இந்தப் 'பதில் மறுப்பு' நாடகம் என்ற முடிவிற்கவன் வருகிறான்.

கறுப்பு ஜூலையில் ஒரு இளைஞனுக்கேற்பட்ட அனுபவம்தான் இது. இவனைப்போன்று அன்றைய தினம் ஊமைகளாக்கப்பட்ட இதயங்கள் பலவாகும்.

ஈழவரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது ஜூலை இனப்படுகொலை. இன்று கொழுந்துவிட்டெரியும் விடுதலை வேட்கைக்கொரு உந்து சக்தியையும், ஈழப்பிரச்சினையை சர்வதேச அரசியல் மட்டத்துக்கு இழுத்து வரவும் பாரிய காரணியாக இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்திருக்கிறது. 2000 த்திற்கு மேற்பட்ட பேரைப் பலியெடுத்த இந்தக் கலவரத்தைப்பற்றி THE HERALD REVIEW (மார்கழி 23.84) எழுதும்போது "தமிழர்களுக்கெதிரான சிங்கள அரசின் யுத்தம். இனஅழிப்புத் தன்மைதனைக் கொண்டிருந்தது" எனக் குறிப்பிட்டது. "சுதந்திரம் பெற்றபின் நடைபெற்ற கணக்கு வழக்கற்ற தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகளுள் 1983ல் நடைபெற்றது மிகவும் மோசமானது" என AFRICASIA (ஜூலை 84) வர்ணித்தது. இந்த இனப்படுகொலை சர்வதேசரீதியிற்பாரிய கண்டனத்தைக் கண்டதாயினும், சர்வதேச அபிப்பிராயங்களுக்கெதிரான சில உண்மைகள் இந்த இனவழிப்பு நடவடிக்கையின் பின்னணியில் ஒழிந்து கிடக்கின்றன. பெரும்பாலானோர் திருநெல்வேலியில் 13 இராணுவச் சிப்பாய்கள் 23.7.83 அன்று கொல்லப்பட்டமையே கலவரக் காரணமெனக் கருதுகின்றனர். இந்தக் கருத்தையே ஈழத்துக்கப்பாலிருந்து கிளப்பும் குரல்களும் எதிரொலிக்கின்றன, "வாரஇறுதியில் யாழ்ப்பாணத்துக்கருகில் தமிழ்ப்பிரிவினை வாதிகளுக்கும் சிங்களச் சிப்பாய்களுக்குமிடையிலேற்பட்ட மோதலின் காரணத்தினாற் கொழும்பில் கலவரங்கள் வெடித்தன". (GUARDIAN 26.7.83) இது சரியா? 13 இராணுவச் சிப்பாய்கள் இறந்திருக்காவிட்டால் இப்படிப்யொரு கலவரம் நடந்திருக்காதா? அண்மையில் தினத்துக்குத் தினம் நூற்றுக்கணக்கான ஈழ மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது இப்படிப் பெருங் கலவரம் நாடளாவிய ரீதியில் வெடித்ததா? இந்தக் கேள்விகளுக்கான விடைகள் கிடைக்கும் போதுதான் கறுப்பு ஜூலை ஒரு திட்டமிடப்பட்ட சதியென்ற உண்மை புலப்படும்.

இராணுவச் சிப்பாய்களின் கொலையையும் கறுப்பு யூலையையும் இணைத்துப் பார்க்கும் போது அதற்குள் ஒரு உண்மை இருப்பதான நினைப்புத் தான் வரும். தர்க்கீக அடிப்படையில் அதனை ஏற்றுக் கொண்டாலும் அதுதான் சரியான காரணமென்பதையேற்க முடியாது. கறுப்பு யூலையுடன் சிப்பாய்கள் சுதாய் இணைந்து கொண்டது ஒரு விபத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூலைக்கலவரம் ஒரு நீண்ட காலத் திட்டம். இப்படியொன்று நடக்கலாம் "அதாவது இனி மேலொரு கலவரம் வெடித்தால் அதனாலேற்படும் பாதிப்பு மிகப் பாரியதாகவிருக்கும்." என்ற ஊகம் சிங்களம் பேசும் பகுதிகளில் மிகத் தாராளமாக உலவியிருந்தன. அத்தோடு இந்த அழிப்பு த் திட்டம் உயர் மட்ட இணைப்புக்களைக் கொண்டிருந்தது. 13 இராணுவச் சிப்பாய்கள் இறந்திருக்காவிட்டாலும், நிச்சயம் யூலையில் இனப்படுகொலையொன்று நடந்திருக்குமென்பதற்கான ஆதாரங்களுள்ளன. இனவெறியமைச்சர் சிறில் மத்தியூவின் நாடாளுமன்ற உரைகள் இதற்கான சாட்சிகள். அத்தோடு, கலவரம் நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரேயே காடையர்களுக்கு ஆயுதங்களும், அறிவுறுத்தல்களுங் கொடுக்கப்பட்டிருந்தன, சிங் களத்தில் பல இரகசிய வெளியீடுகள் விநியோகிக்கப்பட்டிருதன. இவை உத்தியோககப்பற்றற்ற செயிதிகளாகத் தோன்றினும், இவற்றுக்கான ஆதாரங்களில்லாமலில்லை. யூலை இனவழிப்பு நடந்த விதம் வித்தியாசமானது. 13 சிப்பாய்கள் கொல்லப்பட்டனரென்ற ஆத்திரத்தில் அல்லது பிரக்ஞையுடன்தான் தமிழ் பேசும் மக்கள் அழிக்கப்பட்டனரா? இது தொடர்பான நியாயமான சந்தேகம் பலரிடம் எழத் தவறிவிட்டது. சிப்பாய்கள் இறந்தது 23 ஆம் திகதி. அன்றைய தினம் செய்தி பரவத் தொடங்கியது. பத்திரிகையாளர் மாநாடு பாதுகாப்பமைச்சராற் கூட்டப்பட்டு இச்செய்திக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று செய்தியாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். அனைத்து மொழிப் பத்திரிகைகளும் "பத்திரிகா தர்மம்" என்ற சொல்லை மறந்து அமைச்சின் அறிவுறுத்தலுக்குக் கட்டுப்பட்டன. அத்துடன் வானொலி மணிக்கொருதடவை இதனை அலறியது. எங்குமொரு பதட்டம். ஆனால் அன்றைய தினம் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை. ஆனால் மறு தினம் காலையிலேயே அட்டகாசந் தொடங்கியது. பார்த்தவிடமெல்லாம் சிங்களக் காடையர்கள் பளபளக்கும் வாளிகளுடன் தோன்றினர். முகூர்த்தம் குறித்ததைப் போன்று சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பகுதிகளிலும் தூல அழிப்புந் தொடங்கியது. மாலை 4 மணி வரையில் அழிப்பு விடாமற் தொடர்ந்து எல்லா இடங்களிலும் கலவரம் ஒரே நேரத்தில் தொடங்கியதை வைத்துப் பார்க்கும் போது இதுவொரு உணர்ச்சி பூர்வமான நிகழ்வல்லவென்பது புலனாகின்றது.

அத்தோடு வாக்காளர் பட்டியலுடன் தமிழர்கள் சிங்களக் காடையர்களாற் தேடித்தேடிக் கொல்லப்பட்டனர். 13 சிப்பாய்கள் இறந்ததைக் கேட்டவுடன் வாக்காளர் பட்டியலைத் தயார் செய்ய அவர்கள் முனைந்திருப்பார்களென்பதை யதார்த்த பூர்வமாக ஏற்கமுடியாது. 83ற்கு முன்னர் நடந்த இனக் கலவரங்களின் போது பாதுகாப்புப் படைகள் ஓரளவிற்காவது தமது கடமையை உணர்ந்து செயற்பட்டிருந்தன. ஆனால், 83 இலோ இப்படைகள் தமது கடமையை முற்றாக மறந்ததோடு சிங்களக் காடையர்களுக்குத் தாராளமாக உதவின. தமது வாகனங்களைக் கொள்ளைகளுக்குப் பயன்படுத்தின. இதனை 30.7.83 NEWSLINE பின்வருமாறு குறிப்பிடுகின்றது "பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் மிகவும் சுறுசுறுப்பாகத் தாக்குதல்களில் பங்குபற்றினார்களென நேரிற் பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள். தாக்குதல்களுக்குள் சிக்கி பயங்கரப்பட்டு நிற்கும் தமிழர்களுக்கு ஒரு உதவியையும் செய்யாமல் சிப்பாய்கள் நின்றுகொண்டிருப்பதைப் பிரிட்டனுக்கு வந்த தொலைக்காட்சிப் படங்கள் காட்டுகின்றன". உலகத்தைக் கலக்கிய இந்த வன்முறையை எதிர்த்து உடனடியாக அரச தரப்பில் எந்த வேண்டுகோள்களும் விடப்படவில்லை. மிகக் காலங்கடந்து தான் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவாயைத் திறந்தார். அவர் அமைதி காக்கும் படி சிங்கள மக்களை வேண்டவில்லை. மாறாக, "சிங்கள மக்களைக் காப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் சிறீலங்காவில் நான் எடுப்பேன்" என்று பச்சையாக இனவாதத்தைக் கக்கினார்.

யூலைக் கலவரம் ஒரு திட்டமிட்ட சதி. எனவேதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டவேளை அரசு நீண்ட மௌனம் சாதித்தது. இந்த மௌனிப்பு உலக அரச பயங்கர வாதத்தின் உச்சக் கட்டத்தின் ஒன்று. அத்தோடு ஒரு எடுத்துக் காட்டுமாகும். யூலை இன அழிப்புஉலகின் தார்மீக ஆதரவைப் பெற்றது உண்மை. ஆயினும் இந்த அழிப்பு ஒரு சதியென்பது சரி யான முறையில் இன்னமும் நியாயிக்கப்படவில்லை. எனவே இது தொடர்பான சரியான ஆய்வுகள் தேவைப்படுகின்றன. அவை ஈழப் போராட்டத்திற்கு மிகவும் அவசியமாகும்.

—கே.கே. மோகன்—

# வீரவணக்கம்

ஈழ விடுதலைப் போரில் தனது வரலாற்றுக் கடமையை முடித்து அண்மையில் வீரமரணம் அடைந்தார் தோழர் ரவீந்திரன் (ராஜன்). ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கிய உறுப்பினரான இவர், ஈழ விடுதலைப் போரில் தன்னை அர்ப்பணித்து பாரிய பங்காற்றினார். ஈழப் போராட்டத்தை முன்னெடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் தோள் கொடுத்த இந்தத் தோழருக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினது பிரெஞ்சுக் கிளையின் வீர வணக்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழக சிறீலங்கா செய்திகள்

## செட்டிகுளம் ஆக்கிரமிப்பு?

ஈழப்பிரதேசங்களிலிருந்து மக்கள் பலவந்தமாகத் துரத்தப்படும் பயங்கரம் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது. செட்டிகுளத்தில் இது மோசமாகியிருக்கிறது. அங்குள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து வெளியேற்றப்படத் தீர்மானிக்கப்பட்டிருப்பவர்களின் விபரம் வருமாறு:- புளியங்குளம் 7050பேர்;, பெரிய புளியாலங்குளம் 2910; முதலியாகுளம் 3895; செட்டிகுளம் 6846; சூடுவெந்த புலவு; 6311; இப்பிரிவுகளிலுள்ள மக்களை வெளியேற வேண்டாமென அங்குள்ள பிரஜைகள் குழு கேட்டுள்ளது.

## மலையகத்தில் இயற்கையின் சதி!

கடந்த மாதம் மலையகத்தில் பரவலாக மண் சரிவுகள் ஏற்பட்டன, டெடிகமவில் ஏற்பட்ட மண்சரிவில் 14 பேரது சடலங்களும் அட்டனில் ஒரு பெண்ணினது சடலமும் எடுக்கப்பட்டுள்ளன.

## 35 பாடசாலைகளுக்கு மூடுவிழா!.

மூதூர்ப் பகுதிகளில் ஏற்பட்ட கலவரத்தினால் அங்குள்ள 35 பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

17.6.85 அன்று கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த பஸ்கள் வழியில் கல் வீச்சுக்கு உள்ளாகின. 18.6.85 அன்று பொத்துவிலில் வேகமாகச் சென்ற காரின் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் காருக்குள் இருந்த 2 இத்தாலியப் பிரஜைகள் காயமடைந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு துண்டுப் பிரசுரங்கள்.

"கொலைவெறிச் செயல்கள் தொடர்கின்றன, மக்களே! தடுப்பதற்குத் திரண்டு வாரீர்." -என்ற தலைப்பில் யாழ்ப்பாணமெங்கும் துண்டுப்பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளது. 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் இருந்து வெளியேறியவர்கள்' இதை வெளியிட்டதாக பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதே வேளையில் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியும் - "ஊர்காவற்றுறையில் எம்மீது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அடாவடித்தனம்" என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் ஒன்றினை வெளியிட்டுள்ளது. அதில் - "இக்கட்டத்தில் ஐக்கியமில்லையேல் மக்களுக்குத் துரோகமிழைத்தவர்களாவோம்" எனக் குறிப்பிட்டுள்ளது.

## 100 தமிழ் இளைஞர்கள் விடுதலை.

பலாலி இராணுவ முகாமில் விசாரணைகளுக்கென அழைத்துச் செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட இளைஞர்கள் 40 பேர் 4.6.85 அன்று விடுதலை செய்யப்பட்டனர். அதே வேளையில் பூசாமுகாமில் வைக்கப்பட்டிருந்தோரில் 60 இளைஞர்கள் 6.6.85 அன்று விடுதலை செய்யப்பட்டனர்.

## திருமலையில் மீண்டும் பயங்கரம்!!

கடந்த மாதத்தில் மீண்டும் திருமலையில் அரச அட்டகாசங்கள் தலைதூக்கின. இதனால் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிளிவெட்டி மேன்காமம் கங்குவேலி பட்டித்திடல் பாலத்தடிச்சேனை ஆகியவற்றிலிருந்தும் சேருவில உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அரிப்பு, பூநகர், எல்.பி.3 ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களே பெரும்பான்மையாக அகதிகளாகியுள்ளனர். இக்கலவரங்கள் காரணமாக திருமலையில் புதிதாக 4 அகதிமுகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. இதேவேளையில், திருமலை எல்லைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாகரையில் தஞ்சமடைந்துள்ளனர். குச்சவெளி, திரியாய், கும்புறுப்பிட்டி ஆகிய இடங்களில் பாதிப்படைந்தவர்கள் வெருகல் சென்றுள்ளனர்.

தமிழகத்தில் "தமிழீழ வாரம்".

தி.மு.க தலைவர் கலைஞர் மு.கருணாநிதி இம்முறை தனது பிறந்ததினத்தைக் கொண்டாடவில்லை. மாறாக, தனது பிறந்த தினத்திலிருந்து (61 வயது) ஒரு வாரம் வரை "தமிழீழவாரம்" அனுஷ்டிக்குமாறு கேட்டுக்கொண்டார். இதன்படி 30.6.85 இலிருந்து 10.6.85 வரை "தமிழீழவாரம்" சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

மகாராஷ்டிர முதலமைச்சர் ராஜினமா.

மகராஷ்டிர முதலமைச்சர் வசந்தராவ் பட்டேல் (இந்திரா காங்கிரஸ்) தனது பதவியை ராஜினமாச் செய்துள்ளார். திருமதி பிரபுரா இ.கா.வின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதே இவரது விலகலுக்குக் காரணம் எனப்படுகிறது.

மூர்மார்க்கட்டில் தீ விபத்து.

தமிழ் நாட்டின் 86 வருட பழமை வாய்ந்த மூர்மார்க்கட்டில் தீவிபத்து ஏற்பட்டது. விளைவு, 100கோடி பெறுமதியான பொருட்கள் எரிந்து சாம்பராகின.

ஈழ அகதிகளுக்கு இந்தியா உதவுகிறது.

பயங்கரவாத அலைகளினால் ஈழத்திலிருந்து இந்தியாவிற்கு அடித்துச் செல்லப்பட்ட அகதிகளுக்கு வீடுகளைக் கட்டுவதற்காக இந்திய அரசு தமிழக மறுவாழ்வுத்துறை அமைச்சிடம் ஒரு கோடி ரூபாவைக் கொடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த நிறுத்தம்-ஒரு சதுரங்கம்

யுத்தநிறுத்தம். ஈழ-ஸ்ரீலங்கா அரசியலில் தற்போது சூடாக அடிபடும் ஒரு முக்கியமான விடயம். இது ஒரு பரபரப்பினையும், கேள்விக் குறியையும் ஏற்படுத்தியிருக்கிறது. பல்வேறு விதமான கருத்தோட்டங்கள் இது தொடர்பாக தினமும் வளர்ந்துகொண்டு இருக்கின்றன. எமக்குக் கிடைத்த தகவல்களின் படி யுத்த நிறுத்தம் தொடர்பான தமது நிலைப்பாட்டை ஈழவிடுதலை இயக்கங்கள் ஸ்ரீலங்கா அரசியலின் அசைவிற்கேற்ப மாற்றக்கூடுமென்பது புலனாகின்றது.

இந்தியாவில் ஜே.ஆர்- ரஜீவ் பேச்சு வார்த்தைகளின் பின்பே யுத்த நிறுத்தம் சம்பந்தமான அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. ஈழப்பிரச்சனை ஒரு உள்நாட்டுப் பிரச்சனை என்ற மாயை இந்த அறிவிப்பின் மூலம் உடைக்கப்பட்டிருக்கிறது. கூடவே ஈழம் - ஸ்ரீலங்கா ஆகிய இரண்டு நாடுகளுக்குமிடையே தான் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

யுத்த நிறுத்தத்திற்கான் அரசியற் பின்னணி எது? இத்தகைய ஒரு உடன்பாட்டிற்கான தேவை ஸ்ரீலங்கா அரசிற்கு ஏன் ஏற்பட்டது? இதன் உள்ளார்ந்த அர்த்தம் எது? இவை இன்று ஈழ மக்கள் மத்தியில் எழுகின்ற கேள்விகளாகும்.

இந்திய அரசியல் வட்டாரங்களில் பலவித கருத்துக்கள் யுத்த நிறுத்தம் தொடர்பாக உலவுகின்றன. அவற்றுள் ஒன்று பின்வருமாறு அமைகின்றது.

" விடுதலைப் போராளிகள் இந்தியாவில் உள்ளனர். ஈழப் பிரச்சனையை இந்தியா கடந்த காலங்களில் அணுகிய முறையிலுள்ள வேகம். இவை ஸ்ரீலங்கா அரசை குழப்பத்துள் தள்ளின. இத்தகைய ஒரு காலகட்டத்தில் பிரதமர் ரஜீவின் உலக சஞ்சாரம் எங்கே ஈழப் பிரச்சனைக்கு சர்வதேச ரீதியில் மேலும் ஆதரவைக் கொண்டுவந்து தரப்போகின்றதோ என்ற அச்சம், ரஜீவ் விஜயத்தினல் ஈழ ஆதரவு பெருகி ஸ்ரீலங்காமீது உலக நாடுகள் மேலும் பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவரலாம் என்ற கணிப்பு ஆகியனவே ஜே.ஆர்.இனை உடனடியாக இந்தியாவிற்கு ஓட வைத்தது. பின்னர் பேச்சுவார்த்தையின் பின் யுத்த நிறுத்த ஆலோசனை வெளியே வந்தது"

"மூன்று மாதங்களிற்கு போராளிகள் எந்த விதமான தாக்குதல்களையும் அரசுக்கெதிராக மேற்கொள்ளக்கூடாது" - இதுதான் யுத்த நிறுத்தம் தொடர்பாக அரசாங்கம் போட்ட அடிப்படை நிபந்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் ஈழமக்கள் கடந்த காலங்களில் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். எனவே, யுத்த நிறுத்தம் தொடர்பாக இயக்கங்கள் உடனடியாக ஒரு முடிவைக் கூறமுடியாதிருந்தன. ஆயினும், இந்தியாவின் வேண்டுகோளை மதிக்க வேண்டிய அரசியல் நிர்ப்பந்தங்களினால் சில நிபந்தனைகளுடன் சம்மதித்தன. ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது நிபந்தனைகளை— ஈழம் என்ற நிலைப்பாட்டில் நின்று சரியாக முன்வைத்தன. (ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இது தொடர்பாக விடுத்த ஆங்கில அறிக்கையின் தமிழாக்கம் தமிழ்முரசின் இன்னொரு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.) "யுத்த நிறுத்தம் என்பது ஆயுதங்களைக் கீழே வைத்து விடுதல் என்பதாகாது". —என விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அறிவித்தார். "அரசாங்கம் ஆத்திரம் ஊட்டும் நடவடிக்கைகளை யுத்த நிறுத்தத்தின் பின் தொடர்ந்தால் பதில் தாக்குதலை மேற்கொள்ள வேண்டி ஏற்படும்" (வீரகேசரி-20.6.85) என ஐக்கியப்பட்ட விடுதலை இயக்கங்கள் கருத்துத் தெரிவித்தன. தி-மு-க தலைவர் மு.கருணாநிதி "யுத்த நிறுத்த உடன்படிக்கை பற்றிய அரசின் அறிவிப்பு தன்னைப் பலப்படுத்திக் கொள்வதாக மட்டும் இருந்துவிடக்கூடாது என்பதையிட்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று ஆலோசனை கூறியுள்ளார்.

இதேவேளையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொது செயலாளர் பத்மநாபா அண்மையில் சஞ்சிகை ஒன்றிற்குப் பேட்டி அளிக்கும் போது சொன்ன கருத்தொன்று கவனிக்கத்தக்கது.

"ஜெயவர்த்தனே சொல்லும் திட்டமெதுவும் உருப்படியானவை அல்ல. உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக இன்னுமொரு நாடகத்தை மேடையேற்றப் பார்க்கிறார். தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காகப் நம்மைத் தாமதப்படுத்தச் செய்யும் தந்திரமே புதிய பேச்சுவார்த்தைத் திட்டம்."

யுத்த நிறுத்தம் உண்மையிலேயே பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் வந்ததா? இத்தகைய ஒரு நிலைக்கு அரசாங்கம் வந்தபின் ஈழத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் கவனிக்கத்தக்கன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அசம்பாவிதங்கள் நடைபெறுவன சிறிது தடுக்கப்பட்டு, பல அபிவிருத்தித் திட்டங்கள் அங்கே அறிவிக்கப்பட்டன. 1.கொழும்பிலிருந்து கனடிய தீயணைப்பு இயந்திரத்தை யாழிற்குக் கொண்டுவருதல். 2.மீன்பிடித் தடை வலயத்தில் மூன்று மைல்கள் வரை தடையை நீக்கி அதில் தொழில் செய்வதற்கான அனுமதி. 3.யாழ் பெரியாஸ்ப்பத்திரிக்கு ஐந்து மாடிக் கட்டிடம். ஆகியன சில அபிவிருத்தித்திட்டங்களாகும்.

ஆனால் இதேவேளை யாழ்ப்பாணத்திற்கு அப்பாலுள்ள ஈழப்பிரதேசங்களில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை அங்கு வழமை போல கொலை, கொள்ளை, பலாத்காரம் ஆகியவை நடந்து கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முரன்பாடு ஏன் வந்தது? ஒருபக்கம் அமைதி-மறுபக்கம் பதட்டம். இது ஒரு செயற்கைச் சிருஷ்டிப்பா? என்ற ஐயங்கள் பலபக்கத்திலும் எழுகின்றன.

இந்தியாவிலிருந்து ஜே.ஆர் ஸ்ரீலங்காவிற்குத் திரும்பியதும்- "இராணுவ முகாம்களை விட்டு இராணுவத்தினர் வெளியே செல்லாமலிருக்க என்ஞல் நடவடிக்கை எடுக்க முடியும்" என அறிவித்திருந்தார். இதேவேளையில்- தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆன லலித் அத்துலத் முதலி-"ரோந்திற்காக இராணுவத்தினர் வெளியே செல்லுவதைத் தடுக்க முடியாது" என்று நாடாளுமன்றத்தில் சொன்னூர்.

ஒரே கூடாரத்துக்குள் இருந்து வந்த இந்த விதம் விதமான கருத்தோட்டங்கள் ஸ்ரீலங்கா அரசின் இன்றைய நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன..அங்கு தற்போது தலைதூக்கியிருக்கும் உட்கட்சிப் பூசல்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

யுத்த நிறுத்தம் தொடர்பான நிலைப்பாடுகள் அரசு தரப்பிலும் விடுதலைப் போராளிகள் தரப்பிலும் தெளிவாக்கப்பட்டிருந்த வேளையில் பூட்டான் நாடு இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. பூட்டான். இந்தியாவின் வட கிழக்கு எல்லையில் இது அமைந்துள்ளது.இதன் தலைநகரம் திம்பு. மன்னராட்சி நடந்தாலும் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்காத அமைதியான நாடு.

பூட்டானில் பேச்சுவார்த்தை ஏற்பாடுகள் நடைபெற்ற வேளையில் கூட இராணுவம் அமைதி காக்க இல்லை. வழமையான தனது அட்டகாசத்தைத் தொடர்ந்தது. இது ஈழவிடுதலை இயக்கங்களின் யுத்தநிறுத்தம் தொடர்பான சிந்தனைப் போக்கில் திடீர் மாற்றம் ஒன்றிற்கு அடிகோலியது. அதாவது பூட்டானில் நடக்கும் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவதில்லையென ஐக்கியப்பட்ட நான்கு இயக்கங்களும் அறிவித்துள்ளன.

அரசியல் வாக்குறுதிகளைக் கடைப்பிடிக்கும் போக்கில் ஸ்ரீலங்கா அரசு காட்டும் ஸ்திரமற்ற, தந்திர நடவடிக்கைகளே இயக்கங்களின் மறுப்புக்குக் காரணமாக இருக்கலாமென இந்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இயக்கங்களின் மறுப்பு பேச்சுவார்த்தைக்கு மட்டுமே. ஆனல் யுத்தநிறுத்தம் தொடர்பான அவர்களது அடியெடுப்புக்கள் யாவும் ஸ்ரீலங்கா அரசியலில் அடுத்து நடப்பது என்பதைப் பொறுத்தே அமையும் எனலாம்.

இதேவேளையில் இன்னெரு விடயம். அதாவது -ஐக்கியப்பட்ட இயக்கங்களுக்கு அப்பாலிருக்கும் சக்திகள் இந்தக் காலகட்டத்தில் எத்தகைய வழியில் இயங்க முயற்சிக்கலாம் என்பது. இது அவற்றினது கடந்தகால அரசியற் செயற்பாடுகளை வைத்து ஆராயப்பட வேண்டிய அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சூழலை எதிர்ப்புரட்சிச் சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த சில பிற்போக்குச் சக்திகளுடன் தமது உறவுகளை மேலும் வலுப்படுத்தலாம், ,இதுவரை காலமும் கட்டிவளர்க்கப்பட்ட ஐக்கியத்தை உடைக்க முயலலாம், வெளி உலகில் ஈழத்திற்குக் கிடைத்த ஆதரவை மழுங்கடிக்கச் செய்ய முயலலாம். போராளிகளிற்கு ஒரு நெருக்கடியை உண்டுபண்ணலாம் என்று ஊகிக்க வாய்ப்புண்டு.

யுத்தநிறுத்தம் ஒரு சதுரங்கம். இது ஈழமக்களினதும், ஈழப்போராட்டினதும் தலைவிதியுடன் சம்பந்தப்பட்டது. ஈழவிடுதலை இயக்கங்கள் இது விடயத்தில் மிகவும் விழிப்புடன் இருந்து காய்களை நகர்த்த வேண்டும். சில வேளைகளில் விளையாடுவதற்கே சந்தர்ப்பமில்லாமற் செய்ய காய்களைச் சுருட்டிக் கொள்வதற்கான சதிகளும் இருக்கலாம். எனவே ஐக்கியப்பட்ட இயக்கங்களின் கவனிப்பு அனைத்துத் திசைகளிலும் விழ வேண்டியது மிக அவசியமாகும்.

*******************************************

# நிக்கரகுவாவின் புரட்சியினது வெற்றி மாதம்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடியான சேமாசாவின் கொடிய ஆட்சிக்கு வேட்டு வைத்து - புரட்சி ஆட்சி ஒன்றை நிக்கரகுவா நிறுவியது இந்த மாதத்தில்தான். நிக்கரகுவாவின் புரட்சி அரசைக் கவிழ்க்க றேகன் அரசு நாளும் பொழுதும் போட்டுவரும் திட்டங்கள் பல. ஆனால் அவையனைத்தையும் கண்டு கலங்காமல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கு தன்னை பலப்படுத்திக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் கைப் பொம்மைகளான எதிர்ப்புரட்சியாளர் தினமும் பொதுமக்களைக் கொன்று குவிக்கின்றனர்.

எனினும், இவைகள் நெடுங்காலம் நிலைத்து நிற்கா என்பதை நிக்கரகுவா புரட்சி அரசின் முன்னேற்பாட நடவடிக்கைகள் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

## இந்திய வருடப் பிரகடனம்

பிரெஞ்சு அரசாங்கம் இந்த வருடத்தினைப் பிரான்சில் "இந்திய வருட"மாகப் பிரகடனம் செய்திருக்கிறது. இதனை ஒட்டி இந்திய நிகழ்ச்சிகள்பல இந்த வருடம் முழுவதும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம் 7ஆம் திகதி ஈபிள் கோபுரத்துக்கு அண்மையிலமைந்த TROCADERO வில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரனும் நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர். பிரெஞ்சு ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் யானைக்குட்டியொன்றை அன்பளிப்புச் செய்தார். அவர் இங்குள்ள தொலைக் காட்சியொன்றிற்குப் பேட்டியளிக்கும் போது "இலங்கைப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணவும் அங்கு நடைபெறும் அசம்பாவிதங்களைத் தடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என்றார்.

## ரஜீவின் இலங்கை ஈடுபாடு.

இந்தியப் பிரதமர் அல்ஜீரியாவில் இருந்தபோது திருகோணமலையில் இராணுவ அட்டகாசம் மோசமாக நடந்துகொண்டிருந்தது. ஆயிரக் கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டனர். இது தொடர்பாக இந்தியப் பிரதமர் அல்ஜீரியாவிலிருந்து கொண்டே தூதுவரைத் தொடர்பு கொண்டதாகத் தெரியவருகிறது. இதே வேளையில் பிரான்சிலுள்ள வர்த்தக சமூகத்தினர் தனது விஜயத்தின் பலனாக உடனடியாகப் பெரிய ஒப்பந்தங்களை நாடியிருப்பது தன்னிடம் நம்பிக்கையீனமொன்றை ஏற்படுத்தியிருப்பதாகப் பாரிசில் வைத்துத் தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மனியில் தமிழ் இளைஞர் ஆர்ப்பாட்டம்.

200க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இங்கு ஸ்ருட்கார்ட்டில் ஆர்ப்பாட்டமொன்றைக் கடந்த மாதம் நடத்தினர். டி.டி.ரீ கலந்திருக்கும் இலங்கைத் தேயிலையை அருந்த வேண்டாம், அத்துடன் இலங்கைக்குச் செல்லவெண்டாம். சென்றால் வடபகுதிக்குச் சென்று அங்கு நடக்கும் மனித உரிமை மீறல்களை நேரிற் பார்த்து வாருங்களெனத் துண்டுப் பிரசுரம் ஒன்றின் மூலம் அவர்கள் வேண்டுகோள் விட்டனர்:

## சுவிஸ் அகதிகளின் அச்சம் நீங்குகிறது.

சுவிட்சலாந்தில் உளள ஈழத்து அகதிகளைத் திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசு தீர்மானித்திருந்தது.ஆனால் ஐ.நா இதுவிடயத்தில் தலையிட்டு தனது பலத்த கன்டனத்தைத் தெரிவித்ததனால் இம்முடிவு மாற்றப்பட்டு விட்டது.


## ஜப்பானில் பிக்குகள் யாத்திரை.

ஜப்பானியப் பிக்கு ஒருவர் யாழ்ப்பாணத்தில் தவறுதலாகக் கொலைசெய்யப்பட்டாரல்லவா. இந்த விடயத்தை சிறீலங்காப் பிக்குகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஜப்பானில் ஒரு எதிர்ப்புப் பாதயாத்திரையை ஒழுங்கு செய்தனர். இதில், யப்பானியப் பிக்குகள் கலந்து கொண்டனர்!

## பத்திரிகையாளரைக் கொல்லும் பிலிப்பைன்.

பிலிப்பைனின் பிற்போக்கு அரசுக் கூலிப் பட்டாளங்கள் அண்மையில் தியேட்டர் ஒன்றினுள் வைத்து பத்திரிகையாளர் மானிஜுவலியனைக் கொலை செய்தனர். கடந்த 6 வருடத்துக்குள் பிலிப்பைன்ஸில் 14 பத்திரிகையாளர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவுகளை நிஜமாக்குவோம்

ஆக்கிரமிப்பாளனின்
ஏவலிக்கடை முகாமில்
மனித நாகரீகங்கள் மரணித்தன
ஈழ விடுதலைப் போர்க்களப் பாதையில்
மக்கள் படையில் இணைந்து சென்று
மகத்துவ மிக்க தோழர்கள் மீது
மனித மிருகங்கள் வெறிகொண்டு தாவின.

ஆளும் வர்க்கத்தின் ஏவல் நாய்கள்
எங்கள் தோழர்கள் உடல்களெங்கும்
மிருகத்தனங்களைச் சிருஷ்டித்து முடித்தன
ஆயுத மேந்திய எங்கள் யுத்தத்தில்
விடுதலைப்படையின் முன்னணித் தோழர்கள்
புத்தனின் பீடத்தில் குருதியில் புதைந்தனர்
பாஸ்கரன்... தேவகுமார்......
எங்கள் தோழர்கள் மகத்துவ மனிதர்கள்
இவர்கள் பதிந்த இரத்தச் சுவடுகள்
சிவந்து எரியும் விடுதலைப் பாதையில்
திசை வழி காட்டும் சிவப்பு நட்சத்திரங்கள்

மக்களுக்கான விடுதலை யுத்தத்தில்
இலட்சியக் கனவுகளை இதயத்தில் சுமந்த
எங்கள் தோழர்கள்
மறக்கப்பட்டவர்களல்ல!

இவர்களைக் கொன்ற
ஈழ மக்களின் கொடிய பகைவர்கள்
மன்னிக்கப்பட வேண்டியவர்களுமல்ல!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தேசிய விடுதலை முன்னணி ஒரு புரட்சிகர வெளிப்பாடு

சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சி அலைகளினால் ஈழத்தேசிய விடுதலைப் போராட்டம் நிர்மூலமாகிவிடுமபாயத்தை எதிர்கொள்ளவும் உலகின் அரசியல் பொருளாதார சமூக நிகழ்வுப் போக்குகளை மார்க்சீச விஞ்ஞான அணுகு முறையில் எழக்கூடிய சர்வதேச அரசியல் கண்ணோட்டத்துடன் புரட்சிகரமான முறையில் சிந்தித்ததன் விளைவாகத் தோற்றம் எடுத்திருப்பதுதான் ENLF என்றால் இது ஒருபோதும் மிகைப் படுத்தப்பட்ட கருத்தாக இருக்க முடியாது.

ஈழப்போராட்ட முன்னெடுப்பு ஒரு புள்ளியை எட்டிப் பிடித்திருக்கும் நிகழ்வை வெளிப்படுத்தியிருக்கும் வடிவமான ENLF (ஈழத்தேசிய விடுதலை முன்னணி) அனைத்துத் தமிழ்த்தேசிய இனத்தின் அபிலாசைகளை அண்மித்து வந்திருப்பதுடன் ஒரு புதிய உத்வேகத்துடனே போராட்ட நடவடிக்கைகள் நிகழப் போகின்றன என்பதற்கான முன்னறிவிப்பாகவும் அமைந்துவிட்டது.

நாம் ஒரு தூய்மையான புரட்சிகர சத்திகள் என்பதைத் தமிழ் மக்கள் மத்தியில் அடையாளம் காட்டியிருக்குமிந்த முற்போக்குச் சக்திகள் தமது ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் மூலமாக ஈழப்போராட்டத்தை வெற்றியின் திசையை நோக்கி இட்டுச் செல்லுவர் என்பதில் ஐயமில்லை.

புரட்சிகர சிந்தனை கொண்டவர்களை எந்தவொரு பிற்போக்குச் சக்திகளாலும் வென்றுகொள்ளமுடியாதென்பதும் வளர்ந்துவரும் புதிய சமுதாயம் உடைத்துவிடமுடியாத ஒரு முற்போக்குச் சக்தியே என்ற உண்மைகள் மெய்ப்பிக்கப்பட்டு வருவதை உருவகப்படுத்தி உயர்த்தி வைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கட்டமாக மூன்று ஈழவிடுதலை இயக்கங்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஒருமைப்பாடு. இந்த முதற்கட்ட ஒருமைப் பாட்டின் உள்ளார்ந்த நிகழ்வுப்போக்கின் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் முன்னேற்றகரமான பாய்ச்சல் ஏற்பட்டு ENLF தோற்றமெடுத்ததும், அத்தோடு இதற்கும் ஏனைய ஈழவிடுதலை இயக்கங்களுக்குமிடையில் தொடர்ச்சியாக நடைபெற்ற பேச்சு வார்த்தை என்ற நிகழ்வுப் போக்கின் ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் த.ஈ.வி.புலிகள் ENLF உடன் இணைந்து கொண்டதும்- இவையெல்லாவற்றையும் தன் செயலான சம்பவங்களென்று கருதிவிடமுடியாது. மாறாக ஈழப்போராட்ட முன் எடுப்பில் தொடர்ச்சியாக நிகழ்ந்தேறிய முன்னேற்றகரமான நிகழ்வுப் போக்குகள் (அளவுநிலைமாற்றங்கள்) ஒரு புரட்சிகரப் பாய்ச்சலை நிகழ்த்தியதன் மூலம் மேலுமொரு புதிய கட்டத்தை (பண்புநிலைமாற்றத்தை) வந்தடைந்திருக்கிறது.

புரட்சிகரமான ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும்ஒவ் வொரு பாய்ச்சல் மூலமே நிகழ்கின்றன என்ற மார்க்சீச லெனினிச தத்துவஞான கருத்தோட்டத்தை மெய்ப்பித்திருப்ப துடன் அவசியத்தையொட்டிய இத்தகைய புதிய மாறுதல்கள் நமது ஈழவிடுதலையியக்கங்களின் ஆழமான அரசியல் முன்னேற்றத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன.

ENLF இன் தோற்றமும் அது கண்டுவருகிற வளர்ச்சியும் ஈழப்போராட்டத்தில் ஓர் கூரிய முனைப்பையேற்படுத்தியிருக்கும் இந்தக் காலகட்டத்தில் ENLF உடன் இணைவதில் இன்னும் தாமதம் செய்துவரும் விடுதலையியக்கங்களில் எதிர்ப்புரட்சி சக்திகளின் ஆதிக்கம் வலுக்கக்கூடிய அபாயங்கள் உண்டாகலாம் என்ற நியாயமான அச்சம் எதிர்ப்புரட்சிச் சக்திகளின் தந்திரோபாயங்களை உணர்ந்துகொண்டவர்களின் மத்தியில் ஏற்பட்டிருப்பது செய்யக்கூடிய ஒரு விட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமல்ல. புரட்சிகர சக்திகளை அடக்கி ஒடுக்கிவிட மூர்க்கத்தன மான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும்அமெரிக்க ஏகாதி பத்தியம் நிக்கராகுவாவின் புரட்சிகர சாண்டினிஸ்தியா அர சினை வீழ்த்திட செய்துவரும் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் ஈழவிடுதலைப் போராட்டத்திலும் ஏகாதிபத்தியத்தின் ஏவலா ளர்களால் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய வாய்ப்புக்கள் இரு ந்து வருகின்றன. நிக்கரகுவாவில் உருவாகிய கொரில்லாக் குழுக்களே இன்று சாண்டினிஸ்தியா புரட்சிகர அரசின் எதிர்ப் புரட்சிக் குழுக்களாக ஏகாதிபத்தியத்தால் முனைப்படுத்தப்ப பட்டிருக்கின்றன. ஏகாதிபத்தியத்தால் நடைமுறைக்குக் கொ ண்டுவரப்பட்டிருக்கும் இத்தகைய நவீன எதிர்ப்புரட்சி நடவடி க்கைகளை ஈழவிடுதலை இயக்கம் ஒவ்வொன்றும் கவனத்துக்கு எடுத்தாக வேண்டியது கட்டாய கடமையாகும்.

இவ்விதமாக சர்வதேச அரசியலில் நாளாந்தம் நிக ழ்த்தப்பட்டு வருகின்ற- புரட்சி- எதிர்ப்புரட்சி வரலாற்று அனுபவங்களால் நன்றாகக் கற்பிக்கப்பட்டும் வென்றுகொள்ளக் கூடிய முரன்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒருமைப்பா ட்டுக்கு உடன்படுவதில் நாட்களைக் கடத்துவது ஈழப்போரா ட்டத்தில் எவ்விதமான நன்மைகளையும் விளைவிக்கப்போவதில்லை. மாறாக போராட்ட முன்னெடுப்பில் பாரதூரமான விளைவுக ளையே கொண்டுவருமென பொதுவாக எச்சரிக்கப்படுகிறது. ஆகவேதான் எதிர்ப்புரட்சிச் சக்திகள் ஈழவிடுதலையியக்கங்க ளினூடே ஊடுருவச்செய்யக்கூடிய வாய்ப்புக்கள் பெருகிக்கொ ண்டுவருமின்றைய காலகட்டத்தில் ஈழத்தின் இறைமைக்காக, அங்கேயொரு சோசலிச சமூகத்தின் கட்டமைப்புக்காக போ ராடிக்கொண்டிருக்கும் புரட்சிகர இயக்கங்களானவை இத்தகை ய எதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு ஒன்றுக்கொன்று புரிந்துணர்வுடனும் சிநேக தன்மையுடனும் நெருங்கி வரவேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியதி எந்த ஒரு காரணத்தைக்கொண்டும் தாமதப்படுத்த முடியாத விடயமாகும்.

இலங்கை முதலாளித்துவ சோவனிச அரசின் தொடர்ச்சியான உச்சக்கட்ட அடக்குமுறையினை சடத்துவ உளவியல் ரீதியாக அனுபவித்துக்கொண்டிருக்கும் நிச்சயமற்ற வாழ் நிலைமைகளில் தவித்துக்கொண்டிருக்கும் ஈழமக்களின் மானசீகமான நியாயமான, ஏகோபித்த ஐக்கியத்தை நாடும் எதிர்பார்ப்பை தொடர்ச்சியாகப் புறக்கணித்து வருவதை விடுத்து ஈழவிடுதலை இயக்கங்கள் அனைத்தும் ஆகக்கூடிய அளவில் ENLF என்ற மத்திய ஸ்தாபனத்தை நோக்கி விரைந்துவர வேண்டியதும், இதன்மூலம் புரட்சியின் முதற்பணியை முடிப்பதற்காக ENLF இனை வலுப்படுத்தி வளர்த்தெடுக்கவேண்டுமென்ற அவசியத்தை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

தோழர்: காசி -

தோழர்களே!

தமிழ் முரசுடனான சகல தொடர்புகட்கும்........

THE EDITOR
'TAMIL MURASU'
TAMIL EELAM LIBARATION
COUNCIL (FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.
FRANCE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுப்பு ஜுலை

# சர்வதேசப் பத்திரிகைகளின் பார்வையில்

83ஜுலை தொடர்பாக சர்வதேச பத்திரிகைகளின் நிலைப்பாட்டில் சிறிது மாற்றம் ஏற்பட்டிருந்தது. சில பத்திரிகைகள் ஸ்ரீலங்காவில் 'இன ஒற்றுமை' என்ற மாய்மாலத்தில் தமது பேனைக்களைச் சுழட்டினாலும் ஏனையவை இன அழிப்பினை, காட்டுமிராண்டித்தனமான ஜே.ஆர் இன் ஆட்சியைப் பலமாகக் கண்டிக்கத் தவறவில்லை. அவற்றின் விவரம் வருமாறு:-

* "அரசாங்கத்தினால் வேண்டுமென்றே தொடங்கப்பட்ட கலவரம் காடையர்களின் உபயோகத்தினால் கொண்டுசெலுத்தப்பட்டது. பிரதமர் பிரேமதாஸாவிற்கு நெருக்கமான ஆளுங்கட்சி உறுப்பினர்களால் ஒழுங்கு செய்யப்பட்டும் அவர்களது கட்டுப் பாட்டுக்குள்ளும் கலவரம் அமைந்தது"!

NEWSTATESMAN 26.8.83

* "ஜனாதிபதி ஜெயவர்த்தனே மூன்றும் உலகத்தின் சர்வாதிகார இனவாத கொடுங்கோலனாகத் தோன்றுகிறார். முதிர்ந்த, இனவாத அரசியல் வாதியான அவர் பிரச்சினைகளைத் தேர்ந்தெடுத்து அவைகளுடன் விளையாடுகிறார். பின்னர் அதனைச் செயலுக்குக் கொண்டு வருகிறார்.

GUARDIAN 1.8.83

* "தமது பாதுகாப்பிற்கும் சுய அபிவிருத்திக்குமாகத் தமக்கென ஒரு சுதந்திர நாடு தேவை என்று தமிழ்மக்கள் தற்போது உணரத் தொடங்கியிருக்கிறார்கள். 16ஆம் நூற்றாண்டு காலனியாட்சியிடம் பறிகொடுத்த சுதந்திரத்தை மீளப்பெற்று சுயாதிக்கத்துடனான பிரிந்த தேசியக் குழுவாக மாறவேண்டுமென விரும்புகின்றனர்.

THE TABLET 13.8.83

* "ஸ்ரீலங்காப் பிரச்சினை இன்று இருப்பதைப்போல மேலும் நீண்டு கொண்டே செல்லக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

MAINSTREAM 20.8.83

* "எவரது தொடர்புமற்ற நிலையில் கைதிகள் எட்டுமாதங்க்குக்கு மேலாகச் சிறை வைக்கப்படுகிறார்களென்பதைச் சர்வதேச மன்னிப்புச் சபை தனது விஜயத்தின்போது அறிந்துகொண்டது. இந்தக் காலகட்டத்தில் கைதிகள் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டும், பார்களால் அடிக்கப்பட்டும் கால்விரல்கள் கைவிரல்களுள் ஊசி புகுத்தப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது.

THE NEWYORK TIMES. 24.8.84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளில் வாழும் ஈழ மக்களே

# இதோ! உங்களுக்கான கடமைகள்.

சிறீலங்கா இனவெறி சோவனிச அரசாங்கம் ஈழமக்களைத் தமது காட்டுமிராண்டித் தனமான நடிவடிக்கைகளின் மூலம் கொன்றொளிப்பதோடல்லாமல் சொந்த மண்ணிலேயே அவர்களை நாடற்றவர்களாக்கி வருகின்றது. ஒருபுறம் இயக்கங்களுக்கு யுத்த நிறுத்தக் கோரிக்கை விடுவதும், பேச்சு வார்த்தைக்கு அழைப்பதும் மறுபுறத்தில் தனது இராணுவக் கூலிப்படைகள் மூலம் ஈழமக்களைக் கொன்றொழித்து தனது இரட்டை வேடத்தைக் காண்பித்த போதிலும் ஈழமக்களை முற்றாக அழித்தொழிக்க வேண்டுமென்பதில் உறுதியாக நிற்பதனை அவதானிக்க முடிகிறது.

எவ்வளவு தான் இழப்புக்கள் ஏற்பட்ட போதிலும் ஈழமக்கள் ஈழம் பெற வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக நிற்கின்றனர். ஈழவிடுதலை இயக்கங்களுக்கிடையில் ஏற்பட்ட ஒற்றுமையினாலும் இடைவிடாத தொடர்ச்சியான தாக்குதல்களினாலும் சிறீலங்கா இராணுவம் நிலைகுலைந்துள்ளது. அதோடு சிறீலங்காவில் ஏற்பட்டிருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியினால் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத அரசாங்கத்தின் மீது ஏற்பட்டுள்ள எதிர்ப்பினால் அது ஆட்டம் கண்டுள்ளது. விளைவு ஈழமக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் துணையை நாடியுள்ளது. சிறீலங்கா உண்மையான அந்தரங்கசுத்தியுடன் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவில்லை என்பதனை இங்கு நாம் உன்னிப்பாக அவதானிக்க முடிகிறது. சிறீலங்காவில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியும், அதற்குக்கிடைத்த வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டதும், ஈழக் கோரிக்கைக்கு உலக அரங்கில் ஏற்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவும், பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் பிரச்சனை களுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நிலைக்குத் இனவாத அரசத் தள்ளியுள்ளது, ஆயினும் ஈழப் பிரச்சினைக்கு இது ஒரு நிரந்தரமான தீர்வு ஏற்படுத்துமா என்பது சந்தேகமே.

இவ்வேளையில் வெளி நாடுகளில் அகதிகளாக அரசியல் அடைக்கலம் பெற்றிருக்கும் நாமும் சிறிது சிந்திக்க வேண்டும். ஈழத்தில் நடைபெறும் பிரச்சினைகளுக்கிடையிலும் பாசம் மிக்க ஈழமண்ணை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சமடைந்து ஆகக் குறைந்தது வேளாவேளைக்கு உண்பதும் உறங்குவதுமான வசதியுடனிருக்கிறோம். ஈழத்தில்வாழும் மக்களோ பசி பட்டினியால் வாடுகின்றனர். திடீரென சுகயீனங்கள் ஏற்பட்டால் வைத்தியசாலைக்குச் செல்ல போக்குவரத்து வசதிகள் இல்லை. அங்கு சென்றாலோ மருந்துகளுக்கு தட்டுப்பாடு, வைத்தியர்கள் இல்லாத நிலைமை. இவர்களெல்லாம் யார்? எங்களின் தாய், தந்தையரோ, சகோதர, சகோதரிகளோ, அல்லது உறவினர்களோ தாம். இந்நிலமை தொடருமானால் இவர்கள் எல்லோரும் முற்றாக அழிக்கப்படும் நிலையே உருவாகும்.

இத்தோடு நீங்கள் அடைக்கலம் பெற்றுள்ள நாடுகளில் உங்களின் அவல நிலையை எண்ணிப் பாருங்கள். விசா பெறும் வசதி, வேலை செய்வதற்கான அனுமதிப் பத்திரம் பெறுதல், இருப்பிட வசதிக்காக நீங்கள் எவ்வளவு கஸ்டப் படுகிறீர்கள் என்பதனைச் சிந்தியுங்கள். இவை தவிர மேலை நாடுகளில் அதிகரித்து வரும் பணவீக்கம், வேலையில்லாப் பிரச்சனை, பொருளாதார நெருக்கடி போன்றவற்றினால் அந்தந்த நாட்டு மக்களுடனேயே போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம். இங்குள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலை, நிறுவனங்கள், போசனசாலைகளின் முதலாளிகளும் குறைந்த ஊதியத்தோடு கூடிய வேலை செய்விக்கலாமென்ற நோக்குடன் உங்களை வேலைக்கு அமர்த்தலாம். இதனால் அந்நாட்டுப் பிரச்சனைகளுக்கு உங்கள் மீது துவேச மனப்பான்மையேற்பட்டு உங்களைத் தாக்கவும் முற்படலாம். குறிப்பாக சில நாடுகளில் வெளிநாட்டவர்கள் வெளியேறவேண்டுமென்ற கோசம் வலுவடைந்து வருகிறது. இதனால் இந்நாடுகள் உங்களை அதிக காலம் அனுமதிக்கமாட்டாதுஎன்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, இலங்கையைக் காலனியாதிக்கத்தின் கீழ் வைத்திருந்து பொருளாதார வளங்களைச் சுரண்டிய ஒல்லாந்து, பிரித்தானியா போன்ற நாடுகளே ஈழத்திலிருந்துவந்து அரசியல் தஞ்சம் கோரியவர்களைத் திருப்பியனுப்ப முற்பட்டதும் ஐ.நா சபையின் மனித உரிமைகள் குழுவின் தலையீட்டினால் அம்முடிவை மாற்றியமையையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே அகதிகளாக வெளிநாடுகளில் சிரமங்களுக்கிடையில் வாழ்வதை விடுத்து எமது பாச பூமியான ஈழத்தின் விடுதலைக்காக உங்கள் பங்களிப்பை நல்க வேண்டும். ஈழவிடுதலைக்காகத் தமது நலன்களைத் துறந்து சொல்லொணாக் கஷ்டங்களுக்கிடையில் களங்களில் வீரச் சமர் புரிந்து ஸ்ரீலங்கா இனவெறி அரசின் கூலிப்படைகளை புறங்காணச் செய்து தாம் சிந்தும் செங்குருதி மூலம் ஈழமண்ணிலே ஓர் செங்கொடியை நாட்டி பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அயராதுழைக்கும் ஈழவிடுதலைப் போராளிகளின் கரங்களைப் பலப்படுத்த உறுதி கொள்வோம்.

**ஒன்றுபடுவோம், போராடுவோம், வெற்றிபெறுவோம்.**

தோழர் ஆதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த நிறுத்தம்
# EPRLF இன் உத்தியோகபூர்வ அறிக்கை

(ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) யால் யுத்த நிறுத்தம் (CEASFIRE) சம்பந்தமாக விடுக்கப்பட்ட அறிக்கை)

கடந்த சில நாட்களாக சர்வதேச செய்தித் தாபனங்களில், இலங்கை அரசிற்கும் ஈழவிடுதலை அமைப்பிற்கும் இடையில் இருந்து வருகின்ற யுத்த முரண்பாட்டை தீர்க்கின்ற சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடனான "வெறுப்பான சம்பவங்களை முடிவிற்குக் கொண்டுவரல்" அல்லது "யுத்தநிறுத்தம்" சம்பந்தமான நடவடிக்கைகள் பற்றிய கருத்துக்கள் பரவலாக வெளிவருவதை அவதானிக்க முடிகின்றது. எமது மக்களிற்கெதிராக நவபாசிச சிங்கள அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்ற அரச பயங்கரவாதத்தையும் இனக் கொலையையும் முடிவிற்குத் கொண்டுவருவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையை நாங்கள் அங்கீகரிக்கின்ற வேளையில், இந் நடவடிக்கையானது எல்லாவிதமான தேசிய அடக்குமுறைகளையும் இல்லாதொழிப்பதற்கான பாதையை ஏற்படுத்துமென்பதோடு கடந்த காலங்களாக இலங்கை அரசினால் உறுதியாக கடைப்பிடிக்கப்பட்ட இராணுவத் தீர்வையே தொடர்வதை மறைப்பதற்கான ஓர் மூடுதிரையாகின்ற, கேலிக்கிடமான "தீர்வுகள்" உருவாக்குவதற்கான பங்காளர்களாக இருக்க மாட்டோம். மேற்குறித்த அடிப்படையில் ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (EPRLF) ஈழத்தேசிய விடுதலை முன்னணி (ENLF) இல் உள்ள தனது இணை இயக்கங்களுடனான கலந்தாலோசனைகளின் பின்னர், ஸ்ரீலங்கா அரசு கீழ்வரும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் மாத்திரமே யுத்த நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளல் என்பதில் உறுதியான தீர்மானம் எடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உடனடியாகத் தடைசெய்யப்பட்ட வலயம், பாதுகாப்பு வலயம் என்பனவற்றை நீக்குவதோடு பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களும் வாகனங்களும் சுமுகமாக இயங்கத் தடையாக இருக்கின்ற சட்டமூலங்களை நீக்குதல்.

2. ஸ்ரீலங்கா அரசபடைகளை முகாம்களிற்கு உள்ளேயே தங்கியிருக்கச் செய்வதோடு தமிழ்ப்பிரதேசங்களில் இருந்து முற்று முழுதாக வாபஸ் பெறப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தல்.

3. பாரம்பரிய தமிழர் தாயகத்தின் இனவிகிதாகாரத்தை மாற்றுகின்ற நோக்கோடு அரச உதவியுடன் நடாத்தப்படுகின்ற எல்லாச் சிங்களக் குடியேற்றங்களையும் நிறுத்துவதோடு, இராணுவ நடவடிக்கைகட்காகவும் பயிற்சி வழங்குவதற்காகவுமான தளங்களாகப் பாவிக்கப்படுதலும் உடனடியாக நிறுத்தப்படுவதோடு அத்தளங்களை இல்லாது ஒழிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தல்.

4. எல்லா அரசியற் கைதிகளையும் விடுதலை செய்வதோடு எல்லா விதமான கண்மூடித்தனமான சட்டபூர்வமற்ற கைதுகளிற்கும் முற்றுப்புள்ளி வைத்தல்.

5. தமிழ் மக்களிற்கெதிராக ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளினால் மேற்கொள்ளப் பட்டிருந்த கொடுமைகளை விசாரிப்பதற்காகச் சர்வதேச மட்டத்திலான விசாரணையை ஏற்றல்.

எமது மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்க உகந்ததான அரசியற் தீர்வுக்கு இட்டுச் செல்கின்ற ஸ்ரீலங்கா அரசினது எந்த தூய நடவடிக்கைகளும் எம்மால் சரியான ரீதியில் அணுகப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். அதே வேளையில், ஸ்ரீலங்கா அரசானது இராணுவத் தீர்வையே எம்மீது சுமத்தி பயங்கரவாதத்தையும் இனப் படுகொலையையும் தீவிரப்படுத்துகின்ற முயற்சிகள் ஏதாவது எடுக்குமாயின் எமது முழு ஆயுத பலத்தின் மூலம் பதிலடி கொடுக்கப்படும் என்பதில் உறுதியாகவே இருக்கிறோம்

எல். கேதீஸ்வரன்.

EPRLF இனது உத்தியோகபூர்வ பேச்சாளர்.

17.6.1985.

புதுடில்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் மீது பிரிட்டனின் கொலைக்கரங்கள்

சில பக்கங்கள் / ஜனு சுகிர்தன்

பிரிட்டன் அண்மையில் ஈழத்து அகதிகள் தொடர்பாக திடீர்ச் சட்டமொன்றைக் கொண்டுவந்த போது - ஒரு தேசிய இன அழிப்பிற்கான கரு காலஞ்சென்ற சிறீலங்காப் பிரதமர் எஸ் டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்காவிற்கு எப்படிக் கிடைத்திருக்கலாம் என ஊகிக்க முடிந்தது. 1954ஆம் ஆண்டு "நான் ஆட்சிக்கு வந்தால் 24 மணித்தியாலத்திற்குள் நாடு முழுவதும் சிங்களமயமாக்க லைக் கொண்டுவருவேன்" என்று பண்டா சூழுரைத்ததற்கு பிரிட்டன் பின்னணியாக இருந்ததா? அல்லது பண்டாவின் பாணியை இன்று பிரிட்டன் பின்பற்றுகிறதா? என்று கேள்விகள் எழுகின்றன. ஏனெனில், 'திருப்பியனுப்பல்' முடிவுகளைப் பெற்றுக் கொண்ட ஈழத்து அகதிகள் அதன்மீதான அப்பீலை "24 மணித்தியால"ங்களுக்குள் செய்தாகவேண்டுமென்று மனிதாபிமானமற்ற முறையில்தட்சரின் அரசு சட்டமியற்றி இருக்கிறது.

1954இல் ஒரு "24 மணித்தியாலம்" வந்து தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் நிரந்தர ஆட்டம் ஒன்றிற்கு இட்டுச் சென்றது.

1985இலும் ஒரு "24 மணித்தியால்ம்"- இது இலங்கைக்கு அப்பால் இருந்து வந்திருக்கிறது.

அரச பயங்கரவாதத்தின் வடுக்களை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சுமந்து- பல நெருக்கடிகளுக்கு மத்தியில் உயிரைக் காக்க ஓடி வந்த அகதிகள் விடயத்தில் பிரிட்டன் எடுத்த அணுகுமுறைகள் பனையால் விழுந்த ஒருவனைப் பத்துப் பதினைந்து மாடுகளேறி மிதித்ததை ஒத்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"ஈழத்திலிருந்து வருபவர்கள் உண்மையிலேயே அகதிகள் தானு?" - என்ற "சந்தேகம்" பிரிட்டனுக்கு. அத்தோடு, பொருளாதார கரணங்களுக்காகவே அவர்கள் வருகிருர்கள் என குற்றஞ்சாட்டியிருக்கிறது. பிரிட்டனின்போக்கு பாரிய கண்டனத்தை எதிர்கொண்டிருக்கிறது. GUARDIAN தனது ஆசிரியத் தலையங் கமொன்றில் " தமிழ்ச் சிறுபான்மையினர் பயந்து நடுங்குவதற்கு மிகவும் பொருத்தமான காரணங்களைக் கொண்டுள்ளனர் என்பதை அண்மையில் அங்கு நடந்த சம்பவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. காடையர்களினுல் வரும் துன்புறுத்தல்கள்,இராணுவத்தின் அதிகாரமற்ற நடவடிக்கைகள் இரண்டும் அவர்களது பயத்துக்கான காரணமாயிருக்கிறது." -என்று உண்மை நிலையை நிருபிக்க முற்பட்டிருக்கிறது.

பிரித்தானிய நாடாளுமன்றத்துக்குள் உள்ள சில முற்போக்குக் குரல்கள்" 24 மணித்தியாலதிட்டம்" படு மோசமானது எனச் சுட்டிக்காட்டியுள்ளன. தொழிலாளர் கட்சி எம்.பி.யான DAVID NELLIST – "அனேகமானேரால் 24 மணித்தியாலத்திற்குள் ஒரு எம்.பி.யைக் கூடச் சந்திக்கமுடியாது." என்று சொல்லியுள்ளார். "அபாயத்துக்குள் ஒருவரும் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தும் தார்மீகக் கடமை அரசிற்கு உண்டு" எனக் குரல் கொடுத்துள்ளார் இன்னெரு தொழிற்கட்சி எம்.பி.யான JEREMY CORPYN.

ஈழமக்களைக் கொன்று குவிக்க எஸ்.ஓ.எஸ் கொலைஞர்களை அனுப்பிய பிரிட்டன் விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும். சர்வதேச ரீதியில் எழும் கண்டனங்களைக் கண்டு அது தனது போக்கினைச் சிறிது தளர்த்தினுலும், ஈழத்து அகதிகளிற்கு ஒரு நிரந்தர பாதுகாப்பை அது உறுதிப்படுத்துமா என்பது சந்தேகமே. ஏனெனில், ஏற்கெனவே பலர் ஸ்ரீலங்காவிற்கு திருப்பி அனுப்பப்பட்டு விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் ஆயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட அகதிகள் இன்று பிரிட்டனில். மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத ஒரு நிலைமைக்குள் அவர்கள். இதேவேளையில்- பிரிட்டன் செல்பவர்கள் "விசா" பெற்றபின்தான் அங்கு செல்ல முடியும் என பிரிட்டன் அறிவித்துள்ளது. ஸ்ரீலங்காவில் உள்ள பிரித்தானிய தூதுவராலயத்தில் விசாக்களைப் பெறுவதில் ஈழ மக்கள் பல சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர். ஈழத்து அகதிகள் எந்தவொரு நாட்டிலும் சந்திக்காத பிரச்சினைகளைப் பிரிட்டனில் சந்திக்கிறார்கள். எப்பொழுதுமே பிடிவாதத்திற்கும், பழமை வாதத்திற்கும் முன்னுரிமை கொடுக்கும் பிரிட்டனிடம் உலக சிறுபான்மை இனங்கள் - குறிப்பாக ஈழமக்கள் அவதானமாக இருக்க வேண்டியது அவசியமாகும்




கறுப்பு ஜூலையை நினைவுபடுத்தும் சின்னத்தையே இங்கு காண்கிறீர்கள். இச் சின்னம் தற்போது பிரான்சு முழுவதும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட ஈழப்போராளிகளிற்கு வீரவணக்கங்கள்

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் அவர்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். ஈழபூமியில் எப்போது கால் வைப்போம் என அங்கிருந்த இதயங்கள் கனவு கண்டுகொண்டிருந்தன. திடீரென்று அங்கே பௌத்த புத்தர்கள் "....மகாவம்சம் இருக்கவேண்டிய கரங்களில் உடைந்த மதுப்போத்தல்கள்.... வெள்ளரசு மரத்தின் முன் குவிந்த கரங்களில் துப்பாக்கிகள் ... அன்பைச் சிந்தவேண்டிய கண்களில் துவேச அக்கினி... விளைவு, சிறைக்கதவுகள் உடைக்கப்பட்டன. ஈழப்புத்திரர்களின் உடல்கள் துண்டம் துண்டமாக வெட்டிப் போடப்பட்டன. புத்தபிரானின் போதனைகளுக்கு எதிரான புதிய அத்தியாயம் ஒன்று அங்கே எழுதப்பட்டது. இதோ! வெலிக்கடையில் அந்தக் கறுப்பு யூலையில்– ஈழத்தின் விடிவிற்காகத் தம்மைத் தியாகித்துக்கொண்ட போராளிகளின் பட்டியல்,

1. தங்கத்துரை என்று அழைக்கப்படும்
   நடராசா தங்கவேல்
2. குட்டிமணி என்று அழைக்கப்படும்
   செல்வராஜா யோகச்சந்திரன்
3. ஜெகன் என்று அழைக்கப்படும்
   கணேஷானந்தன் ஜெகநாதன்
4. தேவன் என்று அழைக்கப்படும்
   செல்லத்துரை சிவசுப்பிரமணியம்
5. சிவபாதம் மாஸ்டர் என்று அழைக்கப்படும்
   நவரத்தினம் சிவபாதம்
6. செனட்டர் என்று அழைக்கப்படும்
   வைத்திலிங்கம் நடேசுதாசன்
7. அருமைநாயகம் என்றும் சின்னராஜா என்றும்
   அழைக்கப்படும் செல்லதுரை ஜெயரெட்ணம்
8. அன்ரன் என்று அழைக்கப்படும்
   சிவநாயகம் அன்பழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ராசன் என்று அழைக்கப்படும் அரியபுத்திரன் பாலசுப்பிரமணியம்

10. சுரேஷ் மாஸ்டர் என்று அழைக்கப்படும் காசிப்பிள்ளை சுரேஷ்குமார்

11. சின்னதுரை அருந்தவராசா

12. தேவன் என்றும் அரபாத் என்றும் அழைக்கப்படும் தனபாலசிங்கம் தேவகுமார்

13. மயில்வாகனம் சின்னையா

14. சித்திரவேல் சிவானந்தராஜா

15. கணபதிப்பிள்ளை மயில்வாகனம்

16. தம்பு கந்தையா

17. சின்னப்பு உதயசிலன்

18. கணேஷ் என்றும் கணேஷ்வரன் என்றும் அழைக்கப் படும் கதிரவேற்பிள்ளை ஈஸ்வரநாதன்

19. கிருஷ்ணபிள்ளை நாகராஜா

20. கணேஷ் என்று அழைக்கப்படும் கணபதி கணேசலிங்கம்

21. அம்பலம் சுதாகரன்

22. இராமலிங்கம் பாலச்சந்திரன்

23. பசுபதி மகேந்திரன்

24. கண்ணன் என்று அழைக்கப்படும் காசிநாதன் தில்லைநாதன்

25. குலம் என்று அழைக்கப்படும் செல்லப்பா குலராஜசேகரம்

26. மோகன் என்று அழைக்கப்படும் குமாரசாமி உதயகுமார்

27. ராஜன் என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் சிவகுமார்

28. ராஜன் கோதண்டபிள்ளை தவராஜலிங்கம்

29. கொழும்பான் என்று அழைக்கப்படும் கருப்பையா கிருஷ்ணகுமார்

30. யோகன் என்று அழைக்கப்படும் ராஜயோகநாதன்

31. அமுதன் என்றும் அவுடா என்றும் அழைக்கப்படும் ஞானசேகரன் அமிர்தலிங்கம்

32. அந்தோணிப் பிள்ளை உதயகுமார்

33. அழகராசா ராஜன்

34. வேலுப் பிள்ளை சந்திரகுமார்

35. சாந்தன் என்று அழைக்கப்படும் சிற்றம்பலம் சாந்தகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. தெய்வநாயகம் பாஸ்கரன்
37. பொன்னம்பலம் தேவகுமார்
38. பொன்னையா துரைராசா
39. முத்துக்குமார் ஸ்ரீகுமார்
40. அமிர்தநாயகம் பிலிப் குமாரகுலசிங்கம்
41. செல்லச்சாமி குமார்
42. கந்தசாமி சர்வேஸ்வரன்
43. அரியாம்பிள்ளை மரியாம்பிள்ளை
44. சிவபாலம் நீதிராஜா
45. ஞானமுத்து நவரட்ணசிங்கம்
46. கந்தையா ராஜேந்திரம்
47. டாக்டர் ராஜசுந்தரம்
48. சோமசுந்தரம் மனோரஞ்சன்
49. ஆறுமுகம் செயோன்
50. தாமோதரம்பிள்ளை ஜெயமுகுந்தன்
51. சின்னதம்பி சிவசுப்பிரமணியம்
52. செல்லப்பா இராஜரட்ணம்
53. குமாரசாமி கணேசலிங்கம்

# ஒரு ஈழக்குழந்தையின் வீர மரணம்



சிறிலங்கா அரசின் காட்டுமிராண்டித்தனமான இனவெறிக்குப் பலியாகியிருக்கும் ஈழக்குழந்தை தான் இது. தொட்டிலில் கிடந்து ஆடிப்பாடி மகிழ வேண்டிய பருவத்தில் இதனது வாழ்வு இப்படியாகிவிட்டது. நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானுக்குச் சென்ற படகு கடற்படை வெறியர்களின் கோரத்தனமான தாக்குதலுக்கு உள்ளானதல்லவா? அப்பொழுதே இக்குழந்தை தனது மார்பில் மூன்று குண்டுகளை ஏற்று வீர மரணம் அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LE GENOCIDE DES TAMOULS A SRILANKA

# பிரெஞ்சு மொழியில் ஈழ மக்களின் பிரச்சனைகள்

பிரெஞ்சு மொழியில் ஈழப்பிரச்சினைகள் உதிரிகளாக முன்வைக்கப்பட்டதுண்டு. ஆனால், வரலாற்று ரீதியில், தொகுப்பு நிலையில், ஆராய்ச்சி பூர்வமாக இப்பிரச்சினை கொண்டு வரப்படவில்லையே என்ற முறை இங்கு நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால் அந்தக் குறையைக் களைந்திருக்கிறார் லியோன் பல்கலைக் கழகப் பேராசிரியரும், பாண்டிச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான ஜேன் மேரி ஜூலியா. இவரால் எழுதப்பட்ட LE GENOCIDE DES TAMOULS A SRI LANKA (இலங்கையில் தமிழர்கள் மீதான இனக்கொலை) என்ற நூல் தற்போது விற்பனைக்கு வந்திருக்கிறது.

ஈழப் போராட்டத்தை சர்வதேசரீதியில் வெளிச்சமாக்குவதற்கு ஒரு கருவியாகி உதவக்கூடிய விதத்தில் நூல்மை ந்திருக்கிறது. எந்தவொரு இயக்கத்தினதும் புத்தகமாக அல்லாது ஈழவிடுதலை இயக்கங்களைத்தக்கும் பயன்படத்தக்க பாரிய முயற்சி.

ஒரு தாக்கத்தை பிரெஞ்சு பேசும் மக்களிடையே கொண்டுவரத்தக்க இந்நூலின் சகல அம்சங்களும் கவனிக்கத் தக்கன. வித்தியாசமான ஒரு பாணியில் ஆசிரியர் இலங்கை வரலாற்றை அணுகுகின்றார். இதுவரை காலமும் நடந்த நடந்துகொண்டிருக்கும் இனக்கொலைச் சம்பவங்களின் நேர்த்தியான கோர்வை, எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றி சிக்கலற்ற, எளிமையான விளக்கம், ஆதாரங்கள், விடயங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்க-
-கையாண்டுள்ள எழுத்து உத்தி- இத்தனைக்கும் மேலாக இலங்கை யில் நடக்கும் தமிழ் பேசும் மக்கள் மீதான இனக்கொலையைத் தடுத்து நிறுத்திவிட வேண்டுமென்ற தார்மீக, மனிதாபிமான முனைப்பு ஆகியன புத்தகத்திற்குப் பெருமையைச் சேர்க்கும் சிறப்பு அம்சங்கள். 83 ஜூலை இனப்படுகொலையின் போது ஆசிரியரே அதற்குச் சாட்சியாக இருந்திருக்கிறார்.

நூலின் 8 ஆம் பக்கத்தில் தமிழர் ஒருவர் சிங்களக் காடையர்களினால் எரியூட்டப்பட்டு சித்திரவதைக்குள்ளாகும் படத்தைப் பற்றிக்கூறுகையில் - "எங்களில் ஒவ்வொருவரையும் சவாலுக்கு இழுக்கும் இந்தப் படத்தைக் கண்டதும் என்னுள் கோபமும் அவமானமும் கிளம்பியது. இதற்குக் காரணம் நான் தமிழன் என்பதல்ல நானும் ஒரு மனிதன் என்பது தான்". சிறீலங்கா பற்றிய புதிய பல தகவல்கள் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இனப்பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாக இருந்த சிறீ என்ற சொல்லை இணைத்து "ஸ்ரீ லங்கா" என்ற புதிய பெயர் உருவாக்கப்பட்டதென்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

பிரென்சு வாசகர் ஒருவர் நூலைப்பற்றிக் கருத்துத்தெரிவிக்கையில் "ஆசிரியர் தனது எளிமையான நடையினால் எம்மைக் கவருகிறார். அத்துடன் நூலைப் படிக்கும்போது ஆசிசியரே நம் உடனிருந்து உரையாற்றுவதுபோல இருக்கிறது" என்று குறிப்பிட்டார். நீண்ட உழைப்பின் பயனாக வெளிவந்திருக்கும் இந்த நூலின் விலை மிகக் குறைவேயாகும். அனைத்து மக்களிடமும் இது போய்ச்சேரவேண்டுமென்ற நோக்கில் 30 பிராங்கிற்கே விற்கப்படுகிறது. "பயங்கரமாகத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும்ஒரு சிறுபான்மை இனத்திற்கு" இந்நூலை ஜூலியா காணிக்கையாக்கியிருக்கிறார்.

- சிவந்தர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய முன்னணியை வலுவாக்கி வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவோம்

சிறீலங்காவின் ஆயுதமேந்தியகூலிப்படைகளால் ஒன்று இரண்டு,ஐந்து பத்தாகக் கடந்த காலங்களில் படுகொலை செய்யப்பட்டுவந்த ஈழ மக்கள் இன்று அன்றாடம் ஐம்பது நூறாகப் படுகொலை செய்யப்படும் அளவுக்கு **இலங்கைத் தீவில் பேரினவாதத் தீ பற்றி எரிகிறது......**

சிறீலங்கா நவ பாசிச அரசின் ஆயுதப் படைகளின் கொலை வெறியாட்டம் ஈழ மண்ணையே சுடுகாடாக்கிக் கொண்டிருக்கிறது. வல்வெட்டித்துறை, மன்னார் போன்ற எமது நகரங்கள் ஆக்கிரமிப்புப் படைகளால் எரியூட்டப்பட்டு அவற்றின் எழில்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன: இப்போது ஈழத்தின் பல கிராமங்கள் இனவெறி கொண்டகூலிப்பட்டாளங்களால்சுற்றிவளைத்துகொளுத்தப்படுகின்றன, தாக்கப்படுகின்றன. ஈழத்து மண்ணிலேயே ஈழமக்கள் வாழ்விடங்கள் சிதைக்கப்பட்டும் எதிர்ப்புரட்சி வன்முறையாளர்களால், அகதிகளாக்கப்பட்டும் கல்லூரிகளிலும், கோவில்களிலும், பாதுகாப்பற்ற நிலையில் தங்கியிருக்கின்றனர்.

ஆக்கிரமிப்புப் படைகளின் குரூர வெறியாட்டங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தமது நகரம், கிராமங்களை விட்டு வயல்களிலும், காடுகளிலும் வாழ வேண்டிய அநாதரவான நிலையில் ஈழ மக்களின் எதிர்காலம் சின்னாபின்னாமாக்கப்படுகிறது.

சிறீலங்காவின் கூலிப்பட்டாளங்கள் மீதோ அல்லது இவர்களின் எந்தவொரு படைப்பிரிவின் மீதோ எந்த ஒரு தாக்குதல் ஏற்பட்டாலும் அதற்கு மறு தாக்குதலாக, பழிவாங்கும் நடவடிக்கையாக அப்பாவி மக்கள், சின்னஞ் சிறார்கள், பாடசாலை மாணவர்கள், முதியோர்கள், எந்தவித வேறுபாடுமின்றி கொலைப் பட்டாளங்களால் வேட்டையாடப்படுகிறார்கள்.

ஆயிரக்கணக்கான ஈழ வாலிபர்கள் எதிரிப்படைகளால் கைது செய்யப்பட்டு பல மைல்களுக்கு அப்பாலுள்ள சிறீலங்காப் பிரதேசங்களின் வதைமுகாம்களில் சித்திர வதை செய்யப்படுவதும் படுகொலை செய்யப்படுவது மான மனித நாகரீகமற்ற மிலேச்சத்தன நடவடிக்கைகள் அன்றாட நடைமுறையாகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித குலத்தால் வெறுக்கப்படவும் எதிர்க்கப்படவும் வேண்டியவர்களான சர்வதேச பயங்கரவாதக் கும்பல்களான அமெரிக்க ',சி.ஐ.ஏ,' இஸ்ரேலிய மொசாட், தென்னாப்பிரிக்க இனவெறி அரசு, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கூலிப்பட்டாளம், இவை யாவும் சிறீலங்கா நவபாசிச அரசின் இன்றைய நண்பர்கள்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் குரல்வளையை நெரிப்பதற்குச் சிறீலங்கா அரசின் கொலைக்கரத்தைப் பலமாக்குவதற்கு அமெரிக்க ஏகாதிபதியமும் அதன் ஏவல் நாய்களும் பக்க பலமாக இருந்து வருகின்றன.

**மூன்றாம் உலக யுத்தத்துக்கான தயாரிப்புகளில்** மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அணுகுண்டு அரக்கனான ஏகாதிபத்திய அமெரிக்காவும் அதன் இராணுவ கூட்டாளிகளும் இலங்கைத் தீவைத் தமது ஏகாதிபத்திய மனிதகுல விரோத போருக்கான தளங்களில் முக்கியமான தொன்றாகக் கருதுவதால் ஈழப்போராட்டத்தை ஒடுக்கிவிடும் படுகொலை நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இருந்துவருகின்றன.

இலங்கையில் இன்று தேசிய இன முரண்பாடு கூர்மையடைந்துள்ள நிலையில் சிறீலங்கா மக்களிடம் தேசிய வெறியை மூட்டி இந்தியா மீதான அவதூறுப் பிரச்சாரத்தைக் கட்ட விழ்த்து விட்டு **சிறீலங்காவில் அமைதி பேணும் இரட்சகராக** வேஷமிட்டு அமெரிக்கா தனது கொலைப் பட்டாளத்தை யுத்தக் கப்பலொன்றில் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்திவைத்துள்ளது. இது தவிர தென்னாபிரிக்க இனவெறி அரசுமூலம் அமெரிக்காவானது படுகொலை ஆயுதங்களை சிறீலங்காவுக்கு அனுப்பியுள்ளது.

எனவே அணுசக்தியைக் கையில் வைத்துக்கொண்டு உலக சோசலிச நாடுகளையும், சனநாயக அரசுகளையும், தேசவிடுதலை இயக்கங்களையும் அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொடிய ஏகாதிபத்திய அமெரிக்காவையும் அதன் கொலைகாரக் கூட்டாளிகளையும் ஈழமக்கள் எதிர்த்துப் போராட வேண்டியவர்களாகியுள்ளார்கள்.

இந்த நிலையில் புரட்சிகர ஈழ விடுதலைப் போராட்டமும் இப்போராட்டத்தை முன்னெடுக்கும் ஸ்தாபனங்களும் மிகப் பெரிய பொறுப்புகளைத் தமது தோள்களில் தாங்கிச் செல்ல வேண்டியவர்களாகிறார்கள்.

நாம் பகைவர் மீது மேற்கொள்ளும் புரட்சிகரப் பலாத்கார நடவடிக்கைகள் மிகுந்த கவனத்துடனும், நிதானத்துடனும் அமைந்தவையாக இருக்க வேண்டும், விளம்பர நோக்கங்களை மட்டுமே கருத்தில் கொண்டு தொடுக்கப்படும் தாக்குதல்களானது எமது மக்களின் அழிவுக்கே இட்டுச் செல்லுமென்பதை இன்றைய யதார்த்த நிலைகள் நிரூபிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. அது மாத்திரமல்ல ஆயுதப் போராட்டத்தின் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படவும் இயக்கங்களை மக்களிடமிருந்து அந்நியப்படுத்திக் கொள்ளவுமே இப்படியான செயற்பாடுகள் வழிவகுக்கும் என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

ஈழ தேசத்தின் விடுதலைக்காகவும், சனநாயகத்துக்காகவும் போராடுகின்ற, மக்கள் பிரிவுகள் அனைத்தையும் அணிதிரட்டுவது இன்றைய காலகட்டத்தின் அவசியத் தேவையென்பதை **ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி** ஆரம்பம் முதலே உறுதியாகக் கூறிவருகிறது. இவ்வடிப்படையில் சகல தேச பக்த சக்திகளையும், அணிதிரட்டுவதற்கான வெகுசன ஸ்தாபனங்களையும் எமது முன்னணியில் தலைமையின் கீழ் கட்டியெழுப்பியுள்ளோம். இது தவிர ஈழ விடுதலைக்குப் போராடும் ஏனைய இயக்கங்களுடன் ஐக்கியம், விமர்சனம், சுதந்திரம் என்ற அடிப்படையில் ஐக்கிய முன்னணியை உருவாக்கிச் செயற்பட்டு வருகிறோம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு ஆகியவற்றுடன் நாம் கட்டியமைத்துள்ள ஐக்கிய முன்னணியானது வலுப் பெற்று வரும் இன்றைய வேளையில் தேச விடுதலையில் அக்கறை கொண்ட ஏனைய இயக்கங்களும் ஐக்கிய முன்னணியுடன் இணைவதால் மட்டுமே விடுதலைக்கான தமது பங்கை காத்திரமானதாக்க முடியும்.

**ஐக்கிய முன்னணிக்குள் இருக்கும் ஒவ்வொரு இயக்கத்துக்கும் ஐக்கிய முன்னணியை பாதிக்காத விதத்தில் முன் முயற்சி எடுத்து செயல்படவும், விமர்சிக்கவும், தமது அணிகளையும், இராணுவப் பிரிவுகளையும் வலுவாக்கிக் கொள்ளவும் உரிமையுண்டு.**

ஐக்கிய முன்னணிக்குள் இணைந்து விடுவதன் மூலம் கைகள் கட்டுண்டு போயவிடுமென்றோ, தமது கொள்கைகள் சிதைந்து சின்னாபின்னமாகிப் போய்விடுமென்றோ யாரும் பயப்படத்தேவையில்லை.

**நாமெல்லோரும் ஈழ தேசத்தில் மக்களுக்கான சனநாயகத்தை உருவாக்குவதில் உறுதியுடன் இருக்கிறோம். மக்களுக்கான சனநாயகத்தை உருவாக்க விரும்பும் நாம் ஐக்கிய முன்னணிக்குள்ளும் பெரும்பான்மைகளின் கருத்துகளுக்கும் ஏகோபித்த முடிவுகளுக்கும் கட்டுப்பட்டு செயற்படுவோமென்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது.**

ஆயிரக்கணக்கான ஈழத்து மக்கள் குருதி சிந்திய பின்னும் பலநூறு போராளிகளை பகைவர்களிடம் பறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த பின்னும் எமது நகரங்கள், கிராமங்கள் சிதைக்கப்பட்ட பின்னும் நவீனமயப்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணைச் சுற்றி வளைந்துள்ள நிலையில் நாம் ஒன்றுபட்டு எமது அணிகளை எதிரிகளின் இலக்குகளை நோக்கி முன்னேற்ற வேண்டும்.

ஐக்கியப்படுவோம், முன்னேறுவோம்

போராடுவோம், வெற்றி பெறுவோம்

## இந்திய விமான விபத்து

ஜூன் மாதம் 23 ஆம் திகதி இந்திய போயிங் 747 விமானம் அயர்லாந்துக்கு அருகில் அத்திலாந்திக் சமுத்திரத்திற்குள் வீழ்ந்து நொருங்கியதில் 329 பேர் பலியாகினர். மொன்றியலில் (கனடா) இருந்து பம்பாய் வந்த வழியாலேயே இந்த விபத்து ஏற்பட்டது. இறந்தவர்களுள் 83 பேர் குழந்தைகள். அத்துடன் இரண்டு இலங்கைத் தமிழ் மாணவர்களும் அடங்குவர்.

இந்த விமான விபத்து ஒரு சதி எனப்படுகிறது. குறிப்பாக மூன்று சீக்கிய இயக்கங்கள் இவ்விபத்திற்கு உரிமை கோரியுள்ளன. முதலில் உரிமை கோரிய இயக்கத்தின் பெயர் "சீக்கிய மாணவர் சம்மேளன பத்தாவது படை" இந்து ஏகாதிபத்தியத்திற்கான நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டது என அவ்வியக்கம் அறிவித்திருக்கிறது. இது ஒரு புது இயக்கமாகும்.

உலகிலேயே மிகப் பயங்கரமானது என வர்ணிக்கப்படும் இந்த விபத்தில் சிக்கிய சடலங்களைத் தேடுவதில் அயர்லாந்து, ஸ்பெயின், சிங்கப்பூர், பிரமாண்டக் கப்பல்கள் ஈடுபட்டன.

இதே வேளையில் இந்திய விமான விபத்து நடைபெற்ற அதே தினத்தில் டோக்கியோ விமான நிலையத்திலும் ஒரு குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இதற்கும் இந்திய விமான விபத்திற்கும் சம்பந்தமுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணக்கடத்தல்: எதிர்ப்புரட்சி நடிவடிக்கைகளுக்கு புரட்சிகர முத்திரை

பாலஸ்தீன மக்களின் வரலாற்றைக் குறைந்த பட்சம் 1948ஆம் ஆண்டிலிருந்தாவது ஆராயாமலும், அராபிய தேசிய முதலாளித்துவத் தலைமைகளின் முற்போக்கானதும் பிற்போக்கானதுமான தன்மைகளைப் பற்றிய கணிப்பீட்டை இங்கு கொண்டு வராமலும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், சியோனிசத்தினதும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆராயாமலும் தற்போது நடந்துகொண்டிருக்கும் பணயக் கடத்தல் நடவடிக்கை பற்றிய தீர்க்கமான முடிவை இக்கட்டுரையின் பின் பகுதியில் கொண்டுவருவது மிகவும் கடினமாகும். இருந்த போதிலும் அமெரிக்க ஏகாதிபத்திற்கு எதிரான எல்லா நடவடிக்கைகளும் (பயணக்கடத்தல்) புரட்சிகரமானவை என்ற சூத்திரப் பார்வை சில முற்போக்கு வாதிகள் மத்தியில் கூட காணப்படுவதால் பயணக்கடத்தல் பிரச்சனையை இங்கு அணுகவேண்டியது வரலாற்றுத் தேவையாகும்.

1982ஆம் ஆண்டில் இஸ்ரேலிய இராணுவம் லெபனுனுள் ஊடுருவியது. லெபனுனின் தெற்குக் கரையில் பாலஸ்தீனியர்கள் லெபனுனிய முஸ்லீம் சமுகத்தின் மத்தியில் கட்டிவளர்த்து வந்த பாரிய இராணுவ வியூகத்தைத்ததகர்த்தெறிய வேண்டியதே இஸ்ரேலின் தேவையாக இருந்தது. அதே நேரத்தில் லெபனுன் பாலஸ்தீன விடுதலைப் போராளிகளின்புரட்சிகரஅலைகளில் அகப்பட்டு இப்புரட்சி அலைகள் முழு அரபிய உலகிலும் புரட்சிகர உண்மையைக் கிளறிவிடுமோ என சியோனிஸ்டுகளும், வாஷிங்டன் அதிகாரிகளும் கவலைப்பட்டனர்.

பாலஸ்தீன அகதிகள் முகாம்மீதும், பாலஸ்தீனியர்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகள் மீதும் இஸ்ரேலிய விமானங்கள் குண்டு வீசின. இ.ஸ்ரேலிய இராணுவ கவச வாகனங்கள் லெபனுனில் முஸ்லீம் சமூகங்கள் செறிவாக வாழ்ந்து வரும்தென் லெபனுனிய பிரதேசத்தை ஆக்கிரமித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெபனானிய முஸ்லீம் சமுகம் SHITE MUSLIM, SUNNI MUSLIM, DRUZE இன மக்கள் என்ற மூன்று பிரிவுகளாய் உள்ளன. பெரும்பாலான SHITE முஸ்லீம் மக்கள் NABIH BERRI என்பவரின் தலைமையிலான AMAL விடுதலை இயக்கத்தின் ஆதரவாளர்களாக உள்ளனர். பெரும்பாலான DRUZE இன மக்கள் WALID JUMBLATT இன் தலைமையிலான முற்போக்கு சோசலிசக் கட்சியின் ஆதரவாளர்களாக உள்ளனர்.

1982 இஸ்ரேல் ஊடுருவலின் போது முஸ்லீம் சமுகங்கள் பாலஸ்தீனியர்களுக்கு உதவி புரிந்ததன் நிமித்தமாகவே பாலஸ்தீனியர்களின் இராணுவ எதிர்த்தாக்குதல் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் பலத்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

இஸ்ரேல் பாலஸ்தீனப் போரின் முடிவில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் துனிசியா, ஜேர்மன், சிரியா போன்ற பாலஸ்தீன நாடுகளிற்கு அகதிகளாகப் போய்ச் சேர்ந்தனர். பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜசீர் அரபாத் லெபனானை விட்டு வெளியேறி துனிசியா வந்தடைந்தார்.

இஸ்ரேலியர்கள் தாம் ஆக்கிரமித்த தென் லெபனானில் இருந்து வெளியேற மறுத்தனர். இஸ்ரேலிய எல்லைகள் தென் லெபனானில் வாழும் பாலஸ்தீனியர்களால் தொடர்ச்சியாகப் பயமுறுத்தப்படுகின்றது. எனவே தென் லெபனானில் பாரிய ஆயுதங்கள் (HEAVY WEAPONS ) கொண்ட பாலஸ்தீனியர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படும் வரை தாம் தென் லெபனானை விட்டு வெளியேற முடியாது என்பதே அவர்களது கோரிக்கையாக இருந்தது.

தென் லெபனானிய முஸ்லிம் சமுகம் ஸ்ரேலிய ஆக்கிரமிப்பை முழுமையாக எதிர்த்தது. AMAL விடுதலை இயக்கத்தினர் ஆயுதம் தாங்கிய கொரில்லாப் போரில் ஈடுபட்டனர். இதே வேளையில் லெபனானிய ஜனாதிபதி அமின் கமாயல் (இவர் கிறிஸ்தவ இனத்தைச் சார்ந்தவர். முஸ்லீம் சமுகம் பகிஸ்கரித்த தேர்தலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியானவர்.) இஸ்ரேலியர் லெபனனில் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்.

முஸ்லீம் சமூகத்தின் போராட்டம் அமீன்கமாயல் அரசிற்கு எதிராக முனைப்புள்ள ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டது. AMAL விடுதலை இயக்கமும் முற்போக்கு சோசலிசக் கட்சியும் முனைப்புடன் பங்கு கொண்டன. அமெரிக்க ஏகாதிபத்தியமும், இஸ்ரேலும் அமீன்கமாயல் அரசைக் காப்பாற்ற எடுத்த பகீரதப் பிரயத்தனங்கள் கைகூடவில்லை. AMAL விடுதலை இயக்கத்திற்கும் முற்போக்கு சேசலிசக் கட்சிக்கும் சடத்துவ ரீதியில் இந்த நிலையில் உதவி புரிந்தது சிரிய சோசலிச முதலாளித்துவம்.

இங்கு சிரிய முதலாளித்துவத்தின் நோக்கம் லெபனன் அரசில் பங்குபெறத் துடிப்பதாகவே அமைந்தது. சடத்துவ ரீதியில் AMAL கள் முற்போக்கு சோசலிசக் கட்சிக்கும் (P.S.P)உதவுவதன் மூலம் தமது நலன்களை பேணக் கூடிய அரசை லெபனனில் உருவாக்குவதே சிரியாவின் நோக்கமாய் அமைந்தது.

அமீன்கமாயலின் அரசு இன்றோ நாளையோ விழுமென்றிருந்த நிலையில் ஒரு ஆயுதப் போராட்டம் முழுமையடைந்து புரட்சியாக உருவெடுத்த இந்த வேளையில் சிரிய முதலாளித்துவம் அமீன்கமாயலுடன் சேர்ந்து இடைக்கால அரசொன்றை லெபனனில் நிறுவும் திட்டத்தை முன் வைத்தது.

இதில் AMAL, P.S.P யின் தலைவர்கள் உட்பட மந்திரிகளாகவும், SUNNI முஸ்லீம் பிரதிநிதி பிரதம மந்திரியாகவும் அமீன்கமாலை ஜனாதிபதியாகவும் கொண்ட அரசாங்கம் சிரியாவின் மேற்பார்வையின் கீழ் ஜெனீவா மகாநாட்டில் முடிவாக்கப்பட்டது.

முற்றிலும் ஏகாதிபத்திய சியோனிச சார்பு நிலையில் இருந்த லெபனனிய அரசில் சிரியாவின் ஆதிக்கம் மேலோங்கியது இந்நிலையிலேயே இஸ்ரேல் தென் லெபனனை விட்டு முழுமையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற வேண்டும் என்ற முஸ்லீம் சமூகத்தின் வேண்டுகோளைப் பற்றிய லெபனன் – இஸ்ரேல் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. லெபனானை விட்டு இஸ்ரேல் வாபஸ் ஆக வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

சரி. இஸ்ரேல் தென்லெபனானை விட்டு வெளியேறினால் பாலஸ்தீனர்கள் தென் லெபனானில் மீண்டும் தமது இராணுவ வியூகத்தை ஏற்படுத்திக் கொள்வர். அதற்கான சாதகமான சூழ்நிலை இன்னும் இருந்து வருகின்றது. 1982இல் இஸ்ரேல் லெபனானில் ஊடுருவியதன் நோக்கமே பாலஸ்தீன இராணுவ வியூகத்தை உடைத்தெறியவும் பாலஸ்தீனர்களை நிராயுதபாணி ஆக்கவுமே அது 1985 மே வரை இல்லாததாகி விட்டது. எனவே 1985 மே யில் அவர்கள் லெபனானை விட்டு வெளியேறும்போது தென் லெபனானில் உள்ள பாலஸ்தீனர்களை நிராயுதபாணி ஆக்கும் பொறுப்பை யார் ஏற்றுக்கொள்வதென்பதே இஸ்ரேலின் பிரச்சனையாக இருந்தது. ஒருசர்வதேச சதி உருவானது. பாலஸ்தீனர்களை நிராயுத பாணி ஆக்கும் பொறுப்பை சிரியா ஏற்றுக்கொண்டது, இதற்கு அமரிக்க ஏகாதிபத்தியம் உடன்பட்டது. இஸ்ரேல் தென் லெபனானை விட்டு வாபஸ் ஆகுவதென முடிவு செய்யப்பட்டது.

தென் லெபனானில் வாழும் பாலஸ்தீனர்களுடன் நேரடியாக முரண்படுவது தமது எதிர்ப்புரட்சி நடவடிக்கையை உலகிற்குக் காட்டிவிடும் என்பதைத் தெரிந்த சிரியா தனது கட்டளையை சிரமேற் கொண்டு செய்யும் AMAL விடுதலை இயக்கத்தையும் அதன் தலைவர் NABIH BERRI யையும் நாடியது. ஒரு காலத்தில் புரட்சிவாதி NABIH BERRI (லெபனான் அமைச்சரவையில் சட்ட அமைச்சர்) சிரியாவின் கட்டளையை ஏற்றுக் கொண்டார்.

பாலஸ்தீன அகதிகள் முகாம்களான சாப்ரா சாடில்லா முகாம்களின் மீது AMAL போராளிகள் போர் தொடுத்தனர். ஒரு காலத்துத் தோழர்கள் தமது துவக்குகளை ஒருவருக்கெதிராக மற்றவர் திருப்பிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிகச் சிறந்த கொரில்லாப் போராளிகளான பாலஸ்தீனர்கள் SHITE முஸ்லீம்களின் (AMAL விடுதலை இயக்கத்தினரின்) ஆயுதப் போராட்டத்தை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டத்தை நடாத்தினர். 7கிழமைகள் நீடித்த இப்போர் யூன் மாத நடுப்பகுதியில் முடிவுக்கு வந்தது.


பாலஸ்தீனருக்கு எதிராக ஆயுதம் எதிர்த்துப் போராடிய தன் மூலம் AMAL விடுதலை இயக்கமும் அதன் தலைவர் NABIH BERRI யும் சர்வதேச முற்போக்கு இயக்கங்களாலும் இடதுசாரிக் கட்சிகளாலும் கடுமையாக விமர்ச்சிக்கப்பட்டனர். இந்த நிலையிலே தம் மீதான சர்வதேச கண்டனத்தைதிசை திருப்பி தாம் புரட்சி வாதிகளென மீண்டும் நிருபிக்க AMAL உம் அதன் தலைவர் NABIH BERRI யும் ஈடுபட்ட நடவடிக்கையே கிரேக்க நகரத்தின் ஏதென்ஸ் பட்டனத்தில் இருந்து ரோம் நோக்கிப் புறப்பட்ட TWA விமானத்தை AMAL விடுதலை இயக்கத்தினர் கடத்திய நடவடிக்கையாக அமைந்தது.

இந்த விமானத்தை யூன் 14ம் திகதி கடத்தியது முதற்கொண்டு இக்கட்டுரை எழுதப்படும் வரை 2 கிழமைகளாக சர்வதேசப் பத்திரிகைகளிலும் தொடர்பு சாதனங்களிலும் AMAL விடுதலை இயக்கத்தின் நடவடிக்கைகள் பற்றியும் ஏகாதிபத்திய சியோனிச எதிர்ப்பு வேலைகளைப் பற்றியும் செய்திகள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. இன்று NABIH BERRI இன் படம் அனைத்துப் பத்திரிகைகளின் முகப்பிலும் வந்துகொண்டிருக்கிறது.

தாம் செய்த தவற்றை திருத்த AMAL விடுதலை இயக்கம் எந்தமட்டத்துப் பிரயத்தனம் எடுத்தாலும் பாலஸ்தீனர்களை நிராயுதபாணிகளாக்க சிறிய தேசிய முதலாளித்துவத்திற்கு ஏஜண்டாக AMAL செயல்பட்டதை மார்க்சியவாதிகளும் முற்போக்கு வாதிகளும் மன்னிக்கப் போவது கிடையாது.

ஒா. மகாதேவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamoul Murasu

MURASU -3 OLY-9

JUILLET 1985

UNISSEZ VOUS TOUS LES TRAVAILLEURS ET LES NATIONS OPPRIMEES



L'ENFANT QUI EST TUE PAR LES FORCES DE SRI LANKA DANS LE BATEAU A DELFT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*UNE AUTRE PRETENTION DU GOUVERNEMENT SRILANKAIS*



*Les membres du parti au pouvoir du gouvernement Srilankais expriment souvent qu'il y a de la volonté pour négocier avec les leaders Tamouls y compris avec ceux du groupe militant. Le gouvernement chauviniste Srilankais a nullement besoin de trouver une solution en ce qui concerne le problème Tamoul. Ce qu'il souhaite c'est l'anéantissement totale des Tamouls de l'île:*

*Dans le but d'harceler la communauté Tamoule que les leaders du gouvernement Chauviniste de Srilanka ont fait croire qu'il y aura des négociations avec les leaders Tamouls.*

*Les organisations pour la libération disloquées continuent à se battre pour un Eelam Socialiste, Uni, et brandissent leurs armes contre le gouvernement de J.R.Jeyawardene.*

*Il est à rappeler que les gouvernement précédents depuis l'indépendance de 1948, ont eu des pourparlers et ont conclus des compromis. Plus tard ces pourparlers et les compromis ne sont pas maintenus.*

*En 1956, le leader Tamoul, Mr.S.J.V.Chelvanayagam et le premier ministre S.W.R.D.Bandaranayake ont signé un pacte mais celui devait être rennouncé. Deuxièmement Mr.S.J.V.Chelvanayagam et le premier ministre Dadly Senanayake ont signé un pacte conceinant les conseillers généraux en 1965; ce pacte ne voit pas le jour.*

*Puis plus tard, le holocauste de juillet 1983 oblige le gouvernement à s'assoir autour de la table ronde à la demande du gouvernement indien, qui a duré du 10.01.1984 jusqu'au 14.11.1984 qui est presque une année, qui se terminait malheureusement sans solution satisfaisante.*

*Dans cette condition, le gouvernement souhait fermement d'avoir des pourparlers avec les leaders Tamouls et le "Tamoul Murassu" doute que le gouvernement a toujours l'intention d'anéantir le peuple Tamoul et que de l'autre côté les organisations luttant pour la liberté soient mises en difficulté et peut être que celles-ci disparaîteront complètement.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LES REFUGIES TAMOULS DANS LA REGION DE L'EST POUR SE NOURRIR ILS MANGENT DES FEUILLES

Plus de 3000 familles dans les régions de Muthur et Seruvila sont devenues des réfugiées à cause des attaques contre les Tamouls dans ces régions par l'armée et de la police et les bandits singhalais. Ces derniers sont armés volontairement à la demande du gouvernement Srilankais.

Ces victimes, pour survivre, ils se nourrissent des feuilles d'arbres car il n'y a aucun organisme privé qui vient à l'aide de ces pauvres malheureux.

A peu près 1000 familles se sont réfugiés dans la forêt et elles sont mortes de faim. 1000 familles ont trouvé l'abri dans les locaux des écoles de Kathiraveli and Palchenai. Plus de 600 maisons ont été incendiées par le commando de police, l'armée et puis par les bandits Singhalais, armés par le gouvernement dans la région d'Eechilampathy. Cette destruction de masse a eu lieu dans le commencement du mois de juin 1985. Plusieurs autres locaux commerciaux et des bâtiment privés ont été incendiés pour se changer en cendre.

## L'ADJOINT DU MINISTRE DES AFFAIRES ETRANGERES DE L'INDE EXPLIQUE AU SECRETAIRE DES NATIONS UNIES LA SITUATION DES TAMOULS DE SRILANKA

L'adjoint du ministre des affaires étrangères Mr.Kursith Alamkan a fait une déclaration auprès du sécretaire des Nations Unies le 11 juin en expliquant la situation desespérée des Tamouls de Srilanka. Le ministre Indien exprime que le gouvernement Srilankais a échoué dans sa tentative de trouver une solution politique au problème existant en Srilanka.

Il est à rappeler que certains ministres indiens ont fait de la déclaration au sein du parlement indien, que durant l'assassinat de masse Tamouls et puis la destruction totale des biens leur appartenant pendant le mois de mai, une main étrangère a dû se meler dans cette affaire. Il a été dit que le Mossad d'Israël a pris port dans cet assassinat de masse.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## REVUE DE "LE GENOCIDE DES TAMOULS"

Pour la première fois un livre a été edité et publié en langue française en refletant le problème Tamoul sur le plan international et surtout dans le domaine politique. L'auteur Mr.Jean Marie Julia a essayé d'apporter les faits de l'arrière scène du problème même, qui va d'approche militaire jusqu'à l'agisement du gouvernement chauviniste Srilankais. Le livre contient 128 pages, avec une couverture d'une partie d'Eelam, au nom de génocide des Tamouls de Srilanka.

Comme commencement l'auteur qualifie l'île un endroit dit paradisiaque pour les touristes, mais que cet endroit est un enfer pour les Tamouls. Il apporte les faits réels se qui étaient passés sur l'île. Aussi il a donné des statistiques concernant l'emploi dans l'île des Tamouls de Srilanka. Aussi il explique comment le gouvernement a sû minimiser la population dans les domaines public et semi-privé. Le système éducatif ne manque pas de critique car l'impasse pour les Tamouls qui souhaitent entrer à l'université à cause de la normalisation inventée par le gouvernement.

Aussi il explique au detail le soutient du gouvernement durant les violences qui ont eu lieu dans les années 1977 et 1983, où le holocauste de juillet. La montée de la violence en 1984, le terrorisme d'état augmente sans cesse est aussi mentionné dans ce livre.

Mais d'un côté, ce livre explique la tendance socialiste du mouvement Tamoul pour la libération est combattu par les forces gouvernementales. Mais ce qu'il n'a pas été dit que le gouvernement accuse les combattants de libération en tant que terroristes. Deuxièmement la photo de la couverture accompagnée des notes portant sur l'Eelam est mal faite. Elle est mal faite car le territoire Tamoul n'est pas comme indiqué la photo, une petite partie de la région du Nord Jaffna, mais le territoire Tamoul est en réalité plus étendu, qui comprend les régions Nord et Est bien entendu celle du Nord, Nord Est.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Si la photo du Nord est réelle, elle appuie la position prise par le gouvernement en accordant aux Tamouls que les sièges pour les région du Nord, où sont celles des régions Nord, Nord Est et l'Est?

Pourtant, le premier effort est bon et puis ce-ci peut servir à apaiser la soif de connaissance pour ceux qui veulent savoir plus à propos du problème Tamoul de Srilanka et de la génocide pratiqué sur le peuple Tamoul.

## L'APPEL DES CARDINAUX DE L'INDE DU SUD A Mr. RAJIV GANDHI

Un appel au premier ministre Indien Mr.R.Gandhi a été lancé par les cardinaux de l'inde du Sud, Tamoul Nadu, pour venir en aide et en même temps de trouver une solution de venir "Au secours des Tamouls abandonnés de Srilanka".

La plus part des signataires dudit appel figure:

le Rev. V.S.Selvanathar, Evèque de Pondicheri, Coodaloore et le président de Tamoul Nadu le cardinal conférence . Les répresentants de Tamoul Nadu sont Rev. Dr.R.Arulappa, Evèque de Madras, Mylapore, Rev.Justin Diraviam, Evèque de Madurai et autres cardinaux.

Les cardinaux soulignent en tirant la référence de l'assassinat d'un prêtre catholique à Mannar. Rev. Mary Bastian qui a eu lieu le 6 février, 1985.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE TERRORISME D'ETAT CONTINUE DANS LES REGIONS TAMOULES

Le gouvernement essaye par tous les moyens à annihiler la nation Tamoule de Srilanka. Le gouvernement massacre ces innocents Tamouls dans la région de Jaffna. Ils emparent des biens valeureux des Tamouls et mettent à feu les bâtiments et véhicules appartenant aux Tamouls. Nombreux sont ceux qui sont échappés pour se rendre en Inde comme réfugiés. Ce même tactic est appliqué dans les autres endroits comme ceux de Vavuniya et Baticoloa. Aussi la tentative gouvernementale c'est de diviser les Tamouls, en les attaquant sur plan réligieux.

Actuellement le gouvernement a l'intention de chasser les Tamouls de Trincomalee. Le gouvernement fournit de l'arme aux bandits Singhalais, pour que ceux-ci allient chasser les Tamouls. L'armé et les bandits singhalais ont tués plus de milliers de personnes et nombreux sont eux qui rentrent chez eux comme réfugiées. Les forces armées ont même bombardé certaines ville à partir d'un hélicopter. Comme les crimes précédentes, le gouvernement nie d'avoir melée à cette affaire. Mais le gouvernement ne peut toujours cacher la vérité. Le gouvernement Srilanka néglige son devoir pour trouver une solution pour le problème Tamoul. Par contre le gouvernement essaye d'annihiler la nation Tamoul coût que coût.

**POUR TOUTES LES CORROSPONDANCES**

**L'EDITEUR**
**TAMOUL MURASU**
**CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM**
**10,RUE DES MARTYRS**
**75009-PARIS**
**FRANCE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMMUNIQUE A LA PRESSE PAR LE FRONT REVOLUTIONNAIRE LIBERATION DU PEUPLE D'EELAM EN CE QUI CONCERNE LE CESSEZ LE FEU

**PRESS RELEASE**

**STATEMENT ON REPORTS ON CEASEFIRE ISSUED BY THE EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT (EPRLF)**

The past few days have witnessed widespread speculations in the international news media on moves to bring about "cessation of hostilities" or a "ceasefire" as a means of creating a climate for a negotiated settlement to the prevailing armed conflict between the Sri Lankan State and the Eelam Liberation Movement. While we recognize in principle the need to create the conditions that would lead to the cessation of State Terrorism and Genocide unleashed by the Sri Lankan neo-fascist State against our People and which would pave the way for the removal of all forms of national oppression, we cannot be party to farcial "settlements" which could be used by the Sri Lankan State as a smokescreen to pursue a military solution, as it has consistently done in the past.

Based on the above, the Eelam People's Revolutionary Liberation Front (EPRLF), after consultations with its partners within the Eelam National Liberation Front (ENLF), has taken a firm position that it would agree to a ceasefire, only if the Sri Lankan Government agrees to the following conditions:

i) The immediate lifting of the Prohition Zone, the Surveillance Zone and all other regulations prohibiting the movement of people and vehicles in the affected areas;

ii) The Sri Lankan armed forces to be confined to their barracks and steps be initiated to withdraw them completely from the Tamil areas;

iii) All state-aided Sinhala settlements intended to change the demographic composition of the Tamil traditionalhomeland and used as a base for military and para-military operations and training should cease immediately and steps be initiated to dismantle them completely;

iv) Release of all political detainees and the cessation of all acts of indiscriminate and illegal arrests of civilians.

v) Agree to an international inquiry into all acts of attrocities committed by the Sri Lankan security forces against the Tamil civilian population.

We wish to state categorically, that any genuine moves by the Sri Lankan government to bring about a political solution that addresses the fundamental grievances of our People would be reciprocated by us in a positive manner. By the same token, we are equally firm that any attempts by the Sri Lankan State to impose a military solution and intensify on its acts of terror and genocide against our People would be reciprocated by the full might of our arms.

L. KETHESHWARAN
[OFFICIAL SPOKESMAN OF EPRLF]

17th June, 1985.
NEW DELHI.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# TERRORISME DES FORCES SRILANKAIS



PUBLIE PAR

CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org